விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 08 திங்கட்கிழமை (22.03.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 93

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## சனல்-4 இற்கு அனுப்பப்பட்ட கடிதம் பொன்சேகாவை பழிவாங்கும் நாடகம்

### ஜனநாயக தேசியக் கூட்டணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சனல்-4 தொலைக்காட்சிக்கு அனுப்பப்பட்ட கடிதம், ஜெனரலை சிறைக்குள்ளேயே இறுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நாடகம் என ஜனநாயக தேசிய கூட்டணியின் பொதுச் செயலாளர் விஜித கேரத் தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா சனல்-4 தொலைக்காட்சிக்கு எழுதியதாகத் தற்போது பரவலாகத் தெரிவிக்கப்படும் வரைபு தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 700 பேர் தடுத்து வைத்து விசாரணை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 700 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆகியோரினால் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவசர காலச் சட்டம் இந்த மாதம் நீடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து விசாரணை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. மொத்தமாக 700 சந்தேக நபர்கள் இது வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

# அவசர காலச் சட்டத்தை நீக்குவதற்கு இலங்கைத் தூதுக் குழு இணக்கம்?

## ★ ஐரோப்பிய ஒன்றியத் தகவல்கள் தெரிவிப்பு ★

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தையும் மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களையும் மறு ஆய்வு செய்யத் தாம் தயாராக இருப்பதாக இலங்கை அதிகாரிகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்குத் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இரண்டு நாள் விஜயமாக பிரசல்ஸ் சென்றுள்ள இலங்கைக் குழுவினர், ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் பெறுவது குறித்த கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அவசர காலச் சட்டத்தைத் தளர்த்துவது, குற்றப் புலனாய்வு விசாரணைகளுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்கும் சில சட்ட விதிகளையும் சரத்துகளையும் நீக்குவது போன்றன தொடர்பில் அவர்கள் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கு சில உறுதி மொழிகளை வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் சாட்சியங்களைப் பாதுகாத்தல், பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாத்தல் போன்ற விதிகளையும் தாம் அறிமுகப்படுத்தவுள்ளதாக இலங்கைக் குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே இலங்கைத் தூதுக்குழுவினருடன் நடை (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவின் தேர்தல் சுவரொட்டிகள் ஊர்காவற்றுறையில் பறிமுதல்!

### மக்களை அமைதி காக்குமாறு ஈ.பி.டி.பி.வேண்டுகோள்

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்காக ஊர்காவற்றுறைக்குச் சென்ற ஐ.தே.க. வேட்பாளர்கள் கொண்டுசென்ற சுவரொட்டிகள் இனந்தெரியாதோரால் பறிக்கப்பட்டதாக ஐ.தே.கவினர் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களான விஜயகலா மகேஸ்வரன், தியாகராஜா துவாரகேஸ்வரன் ஆகியோர் நேற்று தேர்தல் பிரசாரத்திற்காக ஊர்காவற்றுறைக்குச் சென்றபோது அவர்கள் கொண்டு சென்ற சுவரொட்டிகள் பறி (02 ஆம் பக்கம் பார்க்க)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள பொன்சேகா ஐ.நா. செயலர் பான் கீ மூனுக்குக் கடிதம்

### மோசமாக நடத்தப்படுவதாகவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தடுப்புக் காவலில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஆங்கிலச் செய்தித் தாள் ஒன்று அனுப்பிய கேள்விக் கொத்துக்கு சரத் பொன்சேகா அளித்த பதிலில் இதனைக் கூறியுள்ளார்.

கடற்படைத் தளத்தில் சரத் பொன்சேகா சொகுசான அறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ள நிலை (20 ஆம் பக்கம் பார்க்க)






# ஜனநாயகத்தை ஸ்தாபிக்கக் கோரி ஜெனீவாவில் இலங்கையர் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரியும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரியும் இலங்கையர்கள் ஜெனீவா நகரில் ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எதிரில் நடைபெற்றது. இதில் இத்தாலி, பிரான்ஸ், சுவிஸர்லாந்து போன்ற நாடுகளில் வசிக்கும் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் கலந்துகொண்டனர். 26 மணித்தியாலயம் பேருந்தில் பயணித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வந்ததாக இத்தாலியிலிருந்து சென்ற பெண்ணொருவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் காணப்படும் ஜனநாயக விரோத நிர்வாகத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே தான் இதில் கலந்து கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் உரையாற்றியவர்கள் இலங்கையில் குடும்ப நிர்வாகத்தைத் தோற்கடித்து ஜனநாயகத்தை வென்றெடுக்கும் தேவை குறித்து சுட்டிக்காட்டினர். இந்த ஆர்ப்பாட்டத்தை இலங்கையின் ஜனநாயகத்திற்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. (ச-5)

## கார்-மோ.சைக்கிள் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மடத்தடியில் நேற்று இடம்பெற்ற கார்-மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். இதில் தெல்லிப்பழையைச் சேர்ந்த சிவஞானம் (வயது 52) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளை காருடன் மோதுண்டு தூக்கி வீசப்பட்ட நிலையில் படுகாயமடைந்தார். படுகாயமடைந்த அவர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-30)

## புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை புதிய மாநகரசபைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைவபம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.20 முதல் யாழ். பிரதான வீதியில் அமைந் துள்ள மாநகரவளாகத்தில் மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-5)

## ஐ.தே.கவின் தேர்தல்...

முதல் செய்யப்பட்டதோடு வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் ஐ.தே.க. தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டுள்ளது.

இதேவேளை பொதுமக்கள் எக் காரணம் கொண்டும் வன்முறைக்கு இடம் கொடுக்கக் கூடாது என ஈ.பி.டி.பியின் தீவக வலய அமைப்பாளர் கமலேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


## யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தக கண்காட்சி 2010

இடம்: யாழ். வேம்படி மகளிர் கல்லூரி
யாழ். மத்திய கல்லூரி

காலம்: 27, 28,29 மார்ச் 2010 (சனி, ஞாயிறு, திங்கள்)

அனுமதி இலவசம்


அனைவரையும் கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிடுவதோடு விசேட கழிவு விலையில் பொருட்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

(சி-4755)


## நீங்காத நினைவில்
## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 15 10 1946



உதிர்வு 29 03 2008

### அமரர் மணிமேகலாதேவி திருஞானசம்பந்தர்

(முன்னாள் பிரதி அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)

திதி: 22.03.2010

மனைவி என்பவள் இணையில்லா தீபம். அவர் பிரிவால் என் வாழ்வில் ஒளியில்லை. இல்லறத்து குலதீபமாய் இருந்து எம்மை பிரிந்து விண்ணுலகம் சென்று இன்று ஈராண்டானது. என் ஈரநெஞ்சம் இன்றும் அழும். உங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

அன்புத் துணைவர்
திருஞானசம்பந்தர்
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், லோட்டன் வீதி,
வேலைக்கைப் பிள்ளையார் கோவில்-
மானிப்பாய்

(சி-4765)

## மோட்டார் சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று மாலை கல்லுண்டாய் வீதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் த.ரஜீந்தன் (வயது 20) என்ற இளைஞன் படுகாயமடைந்து யாழ். போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-3)

# மரண அறிவித்தல்

## திருமதி கலாவல்லி சின்னத்துரை



(தம்மளை, அளவெட்டி மேற்கு அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாவல்லி சின்னத்துரை அவர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) 21.03.2010 அன்று காலமானார்.

அன்னார் சரவணமுத்து சின்னத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்-அருணோதயக் கல்லூரி, அளவெட்டி), அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து நாகம்மா தம்பதிகளின் மருமகளும், ஈஸ்வரி (கனடா), இராதா, உமா (கனடா), பாமா, காலஞ்சென்ற யசோதா மற்றும் ஐங்கரன் (கனடா), ஜெகதா (கனடா), கிருபா, கௌசலா (கனடா), சுமித்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமிர்தலிங்கம் (அதிபர், யா/ சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி), வரதராஜசிங்கம் (கனடா), கருணாமூர்த்தி (கொழும்பு), நிரஞ்சலா (கனடா), செல்வரகுநாதன் (கனடா), ஞானசுதன் (பூசகர், ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானம், அளவெட்டி, ஊழியர் யா/தொழில்நுட்பக் கல்லூரி), சுரேந்திரன் (கனடா), திருச்செல்வம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிதாயன் (மகாஜனா கல்லூரி), ஹரிதாயன் (மகாஜனா கல்லூரி) வினுஷன் (கனடா), அர்ச்சனா (கனடா), லக்ஷனா (கனடா), அபிஷனா (கனடா), ரமாஜினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), கோவர்த்தனா (உடுவில் மகளிர் கல்லூரி), சேயோன் (கனடா), செழியன் (கனடா), கிரிஷான் (கனடா), கிரிஷாயினி (கனடா), யரிசான் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், பங்கயற்செல்வி (கனடா), பாலசண்முகம் (வவுனியா), பரமேஸ்வரி, ஞானேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் சிவபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ஆறுமுகம், தங்கம்மா, இராசம்மா, இராசரத்தினம் மற்றும் பரநிருபசிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (22.03.2010) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்மளை,
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி-4764)


## பாராளுமன்றத் தேர்தல் 2010
## சுயேட்சைக் குழு இல. 10
### யாழ்ப்பாண மாவட்டம்



கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை



க.ஜெகசோதி



க.துஸ்யந்தன்



ப.கமலதாசன்



வை.செகராசசிங்கம்



வ.யோகானந்தசிவம்



சு.மரிசலீன்



சோ.பத்மநாதன்

சுயேட்சைக்குழு-10 X

இம்முறையாயினும் பாராளுமன்ற உறுப்புரிமையைப் பயனுள்ளதாக்குவோம்

(சி-4734)

# இன்று ஒரு தகவல்

## பொய்

"எனக்குப் பொய்யே பேசத் தெரியாது" என்று சொன்னார் ஒருத்தர்.

"அவருடைய வாழ்க்கையில் அவர் சொல்லும் மிகப் பெரிய பொய் அதுதான்" என்ற உண்மை எனக்குத் தெரியும்.

பொய் பேசுவதை ஒரு கலையாகவே செய்துகொண்டு வருபவர் அவர்.

பொய்யில் எத்தனை வகை இருக்கிறது? அது எந்தெந்த இடத்தில் எப்படியெல்லாம் உபயோகப்படுகிறது? என்பதைப் பற்றியெல்லாம் அவர் ஏற்கனவே என்னிடம் விலாவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அதில் அவர் நிபுணர்.

அதனால் அவர் சொல்லும் விபரத்தை நாமும் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

முகஸ்துதி என்று சொல்கிறோம் அல்லவா, அது ஒரு வகையான பொய். ஒரு பெரிய மனிதரிடம் போய் காரியம் சாதிக்க வேண்டியிருக்கிறது . என்ன செய்கிறோம்?

உன்னைப் போல உண்டா? ஆகா... ஓகோ... என்று புகழ ஆரம்பித்துவிடுகிறோம். நீங்கள் கர்ணனுடைய மறு அவதாரம் என்கிறோம். உடனே அவரும் கையில் கிடைத்ததை அள்ளிக் கொடுக்கிறார்.

முகஸ்துதியில் உள்ள "சைக்கோலஜி" என்ன தெரியுமா? செய்வது முகஸ்துதிதான் என்பது கேட்பவர்களுக்கும் தெரியும். இருந்தாலும் அதைக் கேட்கும் போது மனதுக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இது மனித இனத்தின் பலவீனம்!

அடுத்தவர்களைப் புகழ்வதற்குப் பெயர் முகஸ்துதி. தன்னையே புகழ்வதற்குப் பெயர் தற்புகழ்ச்சி. அதுவும் ஒரு வகையான பொய்தான். எப்படித் தெரியுமா?

நம்மிடமுள்ள குறைகளை மறைத்து நிறைகளை மிகைப் படுத்திப் பேசுகிறோம். இதனால் மற்றவர்களுக்கு நம்முடைய உண்மையான சொரூபம் தெரிவதில்லை. மறைத்து விடுகிறோம். இது பொய்தானே!

சாக்குப் போக்குச் சொல்கிறார்களல்லவா, அதுவும் பொய்யில் ஒரு ரகம். பல சமயங்ளில் நமது கடமையை நாம் ஒழுங்காகச் செய்வதில்லை.

கொடுத்த வாக்குறுதியை மீறி விடுகிறோம்.

அந்தச் சமயத்தில் நம்முடைய தப்பை மறைப்பதற்காக பெரியபொய் சொல்கிறோம். அந்த இடத்தில் அதற்குப்பெயர் சாக்குப்போக்கு.

வீண்பேச்சு என்று சொல்கிறோமல்லவா அதுவும் பொய்யில் ஒருவகை தான்.

ஏதோ பொழுதுபோக வேண்டுமே என்பதற்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசிக்கொண்டிருக்கிறோம் பாருங்க. அதில் பொய்க்கலப்பு அதிகமாக இருக்கிறது.

"அவதூறு" என்று சொல்கிறோமல்லவா,அதுவும் ஒருவகை பொய்தானாம்.

அடுத்தவர்களின் புகழைக் கெடுப்பது போல் நிம்மதியைக் குறைப்பது போல் நாம் பேசுகிறோமே அதற்குப் பெயர் தான் அவதூறு.

"அவன் என்ன பெரிதாக சாதித்துவிட்டான். நான் சாதிக்காத சாதனையா?" என்று பேசுபவர்கள் எத்தனைபேர்?

பொய்யில் மிகவும் வலிமையான ஒரு ரகம் தான் பொய்ச் சாட்சி.

இது அடுத்தவர்கள் வாழ்க்கையை மிகவும் மோசமாகப் பாதிக்கக்கூடியது இது.

ஒரு நீதிமன்றத்தில் போய் நின்றுகொண்டு, நடந்ததை நடக்கவில்லை என்றும் நடக்காததை நடந்ததென்றும் சொல்வது எவ்வளவு பெரிய மோசமான செயல்?

யாருக்கும் கெடுதல் இல்லாமல் ஒரு நல்லது நடக்கும் என்றால் அதற்காகப் பொய் சொல்லலாம் என்கிறார் திருவள்ளுவர். அந்தப் பொய் – உண்மைக்குச் சமம்.

ஒரு வேதாந்தியைப் பார்த்து இந்த உலகத்திலேயே பெரிய பொய் எது என்று கேட்டார் ஒருத்தர்.

"பொய்யான இந்த உடம்புக்கு 'மெய்' என்று பெயர் வைத்திருக்கிறோமே... அதுவும் எவ்வளவு பெரிய பொய்" என்றார் அவர்.

"பொய் சொல்லும் வாய்க்குப் போசனமும் கிடையாது என்பது பழமொழி. இந்தப் பழமொழியில் எனக்கு நம்பிக்கையில்லை என்றார் ஒரு குடும்பத் தலைவர்.

"பொய் சொல்லும் வாய்க்குத் தான் சேர் போசனம் கிடைக்கும். என் மனைவியைப் பார்த்து நீ ரொம்ப அழகாய் இருக்கிறாய் என்று தினமும் சொல்கிறேன். அதனால்தான் சேர் எனக்கு தினமும் போசனம் கிடைத்துக் கொண்டிருக்கிறது" என்று அதற்கு ஒரு விளக்கமும் கொடுத்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## பரிசுத்த வார நிகழ்வு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறையில் எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை பரிசுத்த வார நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

இதில் 28 ஆம் திகதி குருத்து ஞாயிறு, 29 ஆம்திகதி புதிய ஆசி நீர் உற்பத்தி செய்தல், ஏப்ரல் முதலாம் திகதி புனித வியாழன், முதியோர்களுக்கு கால் கழுவுதல், ஏப்ரல் 2 ஆம் திகதி புனித வெள்ளி, சிலுவை முத்தி செய்தல், சிலுவைப் பாதை, 4 ஆம் திகதி உயிர்ப்பு ஞாயி றும் இடம்பெறும்.

கரம்பன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகள் அவர்களாலும் ,நாரந்தனை புனித பேதுரு பாவுலு ஆலயத்தில் அருட்பணியாளர் அருள்நேசன் அடிகள் அவர்களாலும் பரிசுத்த வார நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.(2-72)

## மனதைப் படிக்கும் கம்ப்யூட்டர்

## பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

பிரிட்டனைச்சேர்ந்த விஞ்ஞானிகள், மனிதர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதை படிக்கும் வகையிலான கம்ப்பியூட்டரை வடிவமைத்துள்ளனர்.

இதுகுறித்து, லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி மற்றும் அவரது சகாகக்கள் கூறியதாவது,

கம்ப்யூட்டரால் மனிதர்களின் மூளையை ஸ்கான் செய்வதன் மூலம், அவர்கள் என்ன நினைக்கின்றனர் என்பதைப் புரிந்து கொண்டு, அவற்றை அப்படியே வெளிப்படுத்த முடியும்.

இதற்காக, பத்து தன்னார்வலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

இவர்களுக்கு சில பெண்கள் கடிதங்களை தபால் பெட்டியில் போடுவது, பேப்பர்கப்பில் கோப்பி அருந்துவது போன்ற காட்சிகள் அடங்கிய சில வினாடிகள் மட்டுமே ஒளிபரப்பாகக் கூடிய படம் காண்பிக்கப்பட்டது.

அதன் பின், அவர்கள் என்ன பார்த்தனர் என்பதை திரும்ப நினைவுபடுத்தி பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். அப்போது ஸ்கானர் கருவிமூலம் மூளையில் ஏற்படும் இரத்த ஓட்ட மாறுதல்களை வைத்து, அதன் செயற்பாடு பதிவு செய்யப்பட்டது.

பின்னர், அந்த எலக்ட்ரிக்கல் தகவல்களை, அதற்கென உருவாக்கப்பட்ட கம்ப்யூட்டர் புரோகிராம் மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் நினைவு கூர்ந்ததை, 50 சதவீதம் துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அவர்கள் கூறினர். (2-6)

## வடக்கில் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய


## உலகவங்கி ரூ.300 மில்லியன் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கில் பாடசாலைகளை அபிவிருத்திச செய்யவென உலக வங்கி 300 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்கவும் மற்றும்பாடசாலைகளுக்கு கணனிக் கூட வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் 30 சிறுவர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 484 பாடசாலைகளுக்கு கணனி வசதிகளும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. மேலும் வவுனியாவில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்று நிறுவுவதற்கும் வெளிநாட்டு நிதி பயன்படுத்தப்படவுள்ளது. (2-6)



இலங்கை வங்கி 2 ஆம் கிளையில் மகளிர் பொற்கணக்கு வைத்திருந்த நபரின் இறப்பு இழப்பீட்டுக் காப்புறுதி தொகை ரூபா ஐந்து இலட்சத்துக்கான காசோலையை வங்கி முகாமையாளர் பே.பிரான்சிஸ் பயனாளிக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

*22-03-2010*

*(பங்குனி 8 , திங்கட்கிழமை)*

*சப்தமி பின்னிரவு 2.06 மணிவரை*

*ரோகிணி முற்பகல் 10.46 மணிவரை*

*இராகுகாலம் 7.47- 9.17 மணிவரை*

*சுபநேரம் 12.17- 1.47 மணிவரை*

*இரண்டாம் பங்குனித் திங்கள்*

| | |
|---|---|
| மேடம் | கோபப்படுதல், அதிக செலவு, சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| இடபம் | சிந்தனை மிகுதி, தொழில் நன்மை, போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | நிலை மாற்றம், சுபசெலவு, உறவினர் சந்திப்பு, சயன சுகக் குறைவு. |
| கடகம் | கலந்துரையாடல், போசனசுகம், கீர்த்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும். |
| சிங்கம் | தூரதேசச் செய்தி, தொழிலில் ஆர்வம், நண்பர்கள் சந்திப்பு, போசனசுகம். |
| கன்னி | ஆன்றோர் சந்திப்பு, எதிர்பாராத செலவு, தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| துலாம் | பகையுணர்வு, பணக்குறைவு, வாகன பயம், தொழில் நன்மை. |
| விருச்சிகம் | களஸ்திர நன்மை, தேகநலன், சென்ற இடத்தில் செல்வாக்கு, பொருள் சேர்க்கை. |
| தனுசு | ஜனவசியம், எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம், சுப நிகழ்வு. |
| மகரம் | தொழில் முன்னேற்றம், அதிக செலவு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி. |
| கும்பம் | தொழிலில் ஆர்வம், சுபகாரியச் செலவு, போசனசுகம், மனச் சஞ்சலம் |
| மீனம் | உஷ்ணநிலை, முயற்சி கைகூடும், சகோதரர் உதவி, விருந்துபசாரம் |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 50 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 80 |
| தக்காளி | 40 | 60 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 40 | 50 | 40 |
| கரட் | 120 | 140 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 80 | 40 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-50 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 60 |
| பாகற்காய் | 100 | 110 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 70 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 100 | 110 | 80 |
| லீக்ஸ் | 90 | 100 | 80 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 110 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 100 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# எத்தனை தேர்தல்கள் வந்து போனாலும் எமது பிரச்சினைகள் தொடர்கின்றன

## வவுனியா முகாம் மக்கள்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே போரினால் இடம் பெயர்ந்து மீள்குடியேற்றத்தை எதிர்நோக்கி செட்டிக்குளம் மெனிக்பாம் முகாம்களில் எஞ்சியிருப்பவர்கள் தமக்கு பல பிரச்சினைகள் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

இறுதிக்கட்டப் போரின்போது வன்னிப் பிரதேசத்தில் இருந்து சுமார் 3 இலட்சம் பேர் இடம்பெயர்ந்து வந்து மெனிக்பாம் முகாம்களில் தஞ்சமடைந்திருந்தார்கள்.

இவர்கள் அனைவரையும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுவிடுவார்கள் என அரசு ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது.

எனினும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவடையாத காரணத்தினால் மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டதாகவும் எனினும் இவர்களில் கனிசமான தொகையினரை மீளக்குடியமர்த்தி விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் கடந்த வருடம் மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து வடபகுதியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தல் ஆகியன நடந்து முடிந்துவிட்டன.

தொடர்ந்து ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதியும் குறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென அவர்கள் கூறுகின்றனர். (2-6)

# விடுதலைப்புலிச் சந்தேகநபர்களும் தேர்தலில் வாக்களிக்கமுடியும்

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி சந்தேக நபர்களும் தேர்தலில் வாக்களிக்க முடியும் என தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாண புனர்வாழ்வு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் வாக்களிப்பதற்குத் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பயன்படுத்திய தற்காலிக அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி வாக்களிக்க முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு வடக்கில் தங்க வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிச் சந்தேகநபர்கள் தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கமைய வாக்களிப்பதற்கு தேவையான போக்குவரத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என குறிப்பிடப்படுகிறது. (2-6)

## இந்திய தூதுவர் வன்னிப் பகுதிக்கு விஜயம்

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா கடந்த வெள்ளிக்கிழமை வன்னிப்பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். வவுனியா, ஒட்டுசுட்டான் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு அவர் விஜயம் மேற்கொண்டிருந்ததாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர் வன்னி மற்றும் முல்லைத்தீவு பகுதிகளில் உள்ள அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியதாக தெரிவிக்கப்படுகின்றது. (6)


## மனமுவந்த பாராட்டுக்கள்



**எனக்கு நேர்ந்த பெரும் இழப்பைப் பூர்த்தி செய்த அன்புள்ளம் கொண்ட அதி உயர் மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐயா அவர்கட்கு!**

மானிடப் பிறப்பில் தனது கொள்கை, உடை, நடை, பாவனையில் இயற்கைத் தன்மை மாறாது பண்புள்ளம் கொண்ட நல்ல இதயசுத்தி உள்ள உண்மையான அன்போடு எனது தொழிற்சாலைக்கு செய்த உதவியை நான் மறப்பேனாக இருப்பின் என்னைப் பெற்றெடுத்த அன்புள்ளம் கொண்ட எனது அன்புத்தாயையும் நான் உதாசீனப்படுத்தியவனாவேன். எனது அன்புக்கும் பாசத்திற்கும் மதிப்பிற்கும் உரிய ***உயர் திரு. ஐயா டக்ளஸ் தேவானந்தா*** என்னும் உத்தமரான அமைச்சரை எனது உயிர் , எனது சந்ததியிருக்கும் வரை என்றும் மறக்கவே முடியாதய்யா. ஆரம்ப காலம் தொட்டு எனது தொழில் முன்னேற்றத்திற்கு யாழ். குடாநாட்டில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்களை நாடிச் சென்று சந்தித்தும் எதுவித பலனும் கிடைக்காத வேளையில் அமைச்சரிடம் உதவி கேட்டபோது பண்பான இன்முகச் சிரிப்பு, அன்பான அரவணைப்புக் கொண்டவருக்கு என்னாலான சின்னப் பாராட்டுக்கள். யார் சரி இதையிட்டு வியாக்கியானம் செய்ய முடியாது. தனிப்பட்ட உரிமை.

*லாரசோப் உரிமையாளர்.*
*அச்சுவேலி.*

(சி/4762)



## தட்ஷா அழகுக்கலையகமும் பயிற்சி நிலையமும்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பொதுப்பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து கொள்ளவுள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் எமது மனமுவந்த வாழ்த்துக்கள் உரித்தா கட்டும்!

- ✦ பெண் பட்டதாரிகளுக்கான அழகுக்கலை அலங்காரம்
- ✦ அனைத்து வகையான முக ஒப்பனைகள்
- ✦ மெனிகியூர் , பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts)
- ✦ நவீன வடிவில் தலை அலங்காரம்

(இ

இல 84, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 9713
0774030909,0773383643



# பாராளுமன்றத் தேர்தல்-2010



உள்ளத்தில் தூய்மையின்றி
எண்ணத்தில் தமிழ் உணர்வின்றி
வெறும் வார்த்தையால் பேசுவாரடி-கிளியே
தமிழர் வாழ்வில் பாதகம் செய்வாரடி
கூட்டத்தில் கூடிநின்று
பொய்யுரைகள் சொல்வாரடி -கிளியே
அவர் தேர்தலுக்குப் பின்
இங்கு இருப்பாரோடி!
இங்கு இருந்தே சேவை செய்தார்
எங்கள் தேவைக்கெல்லாம்
அவரை நாடிச் சென்றோம் தேவை முடிந்ததும்
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை
மறப்பது நீதியோ! அவரை மறப்பது நீதியோ!!
சின்னங்களில் எதுவுமில்லை
அவர் சிந்தனைதான் பெரிது
போடுங்கள் புள்ளடி
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு

கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா

X

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

மானிட நேயம் காக்கும் மன்றம்,
வடக்கு மாகாணம்.

(சி-4702-3)

# வன்னியில் மீட்கப்பட்ட 10 ஆயிரம் வாகனங்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்படும்!

## வடமாகாண ஆளுநர் ஏற்பாடு

(கொழும்பு)

யுத்தம் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தங்களது வாகனங்கள் உடைமைகளை கைவிட்டு வந்தவர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உடனடியாக விபரங்களை சமர்ப்பிக்குமாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விரு மாவட்டங்களிலும் இதுவரை 50 ஆயிரம் சைக்கிள்கள், 20 ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள், 500 டிரக்டர்கள் (உழவு இயந்திரங்கள்), 20 ஆயிரம் தண்ணீர்ப்பம்புகள் மற்றும் ஒரு தொகை சிறிய ரக உழவு இயந்திரங்கள் ( லண்ட் மாஸ்டர் ) என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன.


கிளிநொச்சியில் 16 ஏக்கர் நிலப்பரப்பு தெரிவு செய்யப்பட்டு சுத்தப்படுத்தும் வேலைகள் செய்யப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட அனைத்து வாகனங்களும் இங்கு கொண்டு வரப்பட்டு திருத்த வேலைகள் நடத்தப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இதற்கமைய உரியவர்கள் மோட்டார் சைக்கிள்கள் , டிரக்டர்கள் போன்றவற்றின் உரிமையை உறுதி செய்யக்கூடிய ஆவணங்கள் அல் லது ஏதாவது ஒரு சான்றைக் காண் பித்து தங்களது வாகனங்களைப் பெற்றுக் கெள்ளமுடியும். இதேவேளை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஊடாக வாகன உரிமம் தொடர்பாகவும் உறுதி செய்யப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் விட்டு வந்த பஸ், லொறிகள் போன்றவற்றையும் பெற்றுக்கொள்ளல் தொடர்பில் ஆளுநர் கருத்து தெரிவிக்கையில், அது சாத்தியப் படமாட்டாது என்றும் அவை பழுதடைந்த நிலையில் இருப்பதால் கொண்டு வருவதில் சிக்கல்கள் உள்ளன. முதலில் இப் போது சேகரிக்கப்பட்ட 10 ஆயிரம் வாகனங்களையும் மக்களிடம் கையளிப்பதே எமது நோக்கம் என்றார். (2-6)

# பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடன் நடவடிக்கை -ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)



பொதுத்தேர்தலில் தாம் வெற்றி பெற்றால், போரினால் இடம்பெயர்ந்து அவலப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களை அவர்களது பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தி அவர்களது வாழ்க்கையை மேம்படுத்தப் போவதாக வவுனியாவில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய போர் நடைபெற்ற இடங்களில் கண்ணி வெடிகளற்ற பிரதேசங்களிலும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களிலும் உடனடியாகவே மீள்குடியேற்ற நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

போர் நடைபெற்ற பிரதேசங்களில் அழிவடைந்துள்ள சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் மேலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் , யுவதிகளில் சாட் சியமுள்ளவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும். ஏனையவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்தார். (2-6)

# இலங்கையில் பாரிய பூமியதிர்வு ஏற்படக் கூடிய அபாயம்

## பேராசிரியர் கபில தஹநாயக்க

(கொழும்பு)

இலங்கையில் பாரியளவில் பூமியதிர்வு ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர் கபில தஹநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு தெற்கே ஆயிரம் கிலோமீற்றர் தொலைவில் புதிய புவி உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையின் காரணமாக எந்த நேரத்திலும் பாரியளவிலான இயற்கை அனர்த்தம் ஏற்படக்கூடிய சாத்தியம் காண்படுவதாகவும் புயற் காற்றுகள் , மண்சரிவுகள், வெள்ளங்கள், பூமியதிர்வு அல்லது சுனாமி போன்ற அனர்த்தங்களை எதிர் பாக்கலாம் என்றும் எவ்வாறெனினும் குறித்த இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் எதிர்வு கூறல்களையோ அல்லது தடுப்பு நடவடிக்கைகளையோ எடுக்க முடியாதென குறிப்பிட்டுள்ளார்.

400 வருடங்களுக்கு முன்னர் கொழும்பு துறைமுகப் பகுதியில் இடம்பெற்ற நில அதிர்வில் சுமார் 2000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் இலங்கைக்கு அருகாமையில் உள்ள கடற்பரப்பில் ஆறு ரிக்டர் அளவிலான பூமியதிர்வு பதிவானதாகவும் இதே போன்றதொரு பூமி அதிர்வு நிலப் பிரதேசத்தில் பதிவானால் அது பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் விசேட முறைகளின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுக்கு பூமியதிர்வினால் ஏற்படக்கூடிய பாதிப்பு மிகவும் குறைவானதெனவும் தெரிவித்துள்ளார். (2-6)


புதுக்கடை திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் விரோதி வருடம் பங்குனி மாதம் 8ஆம் திகதி (22.03.2010) திங்கட்கிழமை பகல் 10.55 தொடக்கம் 12.00 மணிவரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் அன்னை புத்தகசாலை

(இல .07, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை , யாழ்ப்பாணம்)

ஸ்தாபனத்தாராகிய நாம் எமது கிளை நிறுவனமான

அன்னை புத்தகசாலை

இனை இல. 23 , தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரியில் கௌரவ இ.கைலைநாதன் (ஓய்வு பெற்ற அதிபர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களினால் திறந்து வைக்கப்பட்டு நடாத்தவுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது யாழ் நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளும் சகல புத்தகங்களும், காகிதாதி வகைகளையும் அதே விலைக்கழிவில் சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

23, தனங்கிளப்பு வீதி,
சாவகச்சேரி.

செ.விஜிதரன்
உரிமையாளர்
அன்னை புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/4759)



ஈழத் தமிழர்களுக்கு எதிரான இந்திய-இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியை தோற்கடிக்க...



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்
சிறீகாந்தா - சிவாஜிலிங்கம்
தலைமையில் வடகீழ் மாநிலத்தின்
ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும்
(யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை)

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு

உங்கள் ஆதரவை வேண்டி நிற்கின்றது

X

(இடதுசாரி விடுதலை முன்னணியின் சின்னத்தில்)

(சி/4732)

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - TNA

ஈழத் தமிழர் உரிமைப் பிரச்சினையை
உலகறியச் செய்த
ஊடகப் போராளிக்கே
உங்கள் வாக்குகள்!

X 6

(சி-4731)



தொழிலதிபர்
ஈ.சரவணபவன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி





ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும், பாண்ட் வாத்திய இசைக்குழுவுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## கல்வியியற் கல்லூரியில் நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2010 கல்வி ஆண்டிற்கான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாட நெறிகளுக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. ஏற்கனவே பத்திரிகையில் வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலுக்கமைய நேர்முகத் தேர்வு இடம்பெறும் எனவும் இத் தேர்விற்கு தேவையான பத்திரங்களை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை பெற்றுக்கொள்ளலாம் எனவும் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (6-3)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.24 மணிமுதல் 11.07 வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மேலும் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (6)

## ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சின் ஏற்பாட்டில் மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ள ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை முற்பகல் 9 தொடக்கம் 4மணி வரை நல்லூர் விதாத வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சுயதொழிலினை ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இப்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் யு.எல்.எ. மஜீப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-30)

# மாணவர்கள் தம் ஒழுக்கத்தை தாமே மீளமைக்கும் காலமிது

## பா.தனபாலன் உரை

(யாழ்ப்பாணம்)

ஒழுக்கம் பற்றிய பண்டைய கருத்து விருப்பமின்றி மாணவர்களால் ஏற்கப்படும் கட்டுப்பாட்டுடனும் தண்டனைகளுடனும் கூடிய நடத்தையைக் குறித்தது. ஆனால் இன்றைய கருத்துப்படி மனப்போக்கையும், அம் மனப் போக்கினின்றும் எழும் நடத்தைகளையும் குறிக்கக்கூடிய வகையினதாகப் பரிணமித்துள்ளது என தேசியு கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.தனபாலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலைகளின் மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றும்போது இன்றைய மாணவர்களுடைய , இளைஞர்களுடைய நடத்தைகள் பற்றி பலவாறாக விமர்சிக்கப்படுகின்றது. இதற்குப் பல காரணங்களும் கூறப்படுகின்றது. ஆனாலும் மூத்தோராகிய நாம் மாணவர்களுக்கு மேலும் முன்னுதாரணமாக எமது நடத்தைகளை மாற்றிக்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் ஒழுக்கம் என்பது தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்வதன் விளைவாக எழும் நடத்தையாகும் என்பதை இன்றைய மாணவர்களும், இளைஞர்களும் புரிந்துகொள்ள வேண்டும். இதுவே சமூகத்தில் கூடி வாழும் தன்மையை உயர்த்தும்.

சமகாலக் கல்வியில் ஒழுக்கமே முதன்மையாகக் கொள்ளப்படுகின்றது. நேர்மை, அன்பு, எளிமை, அடக்கம், உறுதி ,கட்டுப் பாடு, விழுமியம்,மதிப்பு ஆகிய செயலாற்றுகைகளின் வெளிப்பாடுகளே நல்லொழுக்கத்தின் குறியீடுகளாகும். இவற்றை நவீன நிலை முகாமைத்துவத்தினூடாகவும் தலைமைத்துவ ஆற்றல்களை வளர்ப்பதனூடாகவும் மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் தடையாக இருக்கும் சக்திகளை அதாவது நீதியின்மை, பொய்மை , அவா, அழுக்காறு, ஒழுங்கீனம் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டு வெற்றி பெறுவதிலேயே மாணவர்களாகிய உங்கள் எதிர்காலம் சிறந்ததாக அமையும் என்றார்.

மேற்படி பயிற்சிப் பட்டறையை மானிப்பாய் லயன்ஸ் கழகம் ஒழுங்குபடுத்தியிருந்தது. (2)

## மஹோற்சவம்

(நீர்வேலி)

நீர்வேலி வடக்கு காளியம்மன் கோவில் மஹோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. இதில் 11 ஆம் நாளான 28 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட் கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

1958 ஆம் ஆண்டு தொடக்கம் அலங்கார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்ற இக் கோவிலில் அண்மையில் புதிதாக இராஜ கோபுரம் அமைக்கப்பட்டது. இப்பகுதியில் முதன் முதல் இராஜகோபுரம் அமைக்கப்பட்ட சிறப்பிற்குரிய இவ்வாலயத்தில் இவ்வாண்டு முதன் முதலாக கொடித்தம்பம் நாட்டப்பட்டு மஹோற்சவம் நடைபெறுவதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (6)

## பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய மென்பொருள் ஆக்கப் போட்டி 2009 பரிசளிப்பு நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். வலயக்கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2)




## விளையாட்டு கழகங்களை பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடைபெறவுள்ள இறுதி தடகள போட்டி மற்றும் பரிசளிப்பு விழா ஆகிய வற்றில் கலந்து கொள்ளவுள்ள கழகங்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவினை உறுதிப்படுத்தி கொள்ளுமாறும் தவறும் கழகங்கள் பதிவிலிருந்து நீக்கப்படுமெனவும் இது தொடர்பான மேலதிக விபரங்களை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றன. (6-30)

# “வெள்ளியில் ஞாயிறு” திருப்பாடுகளின் காட்சி

## இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான “வெள்ளியில் ஞாயிறு” என்னும் திருப்பாடுகளின் காட்சி இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி வரை தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள இவ்வாற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பங்கேற்கின்ற திருப்பாடுகளின் காட்சிக்காக 150 அடி நீளமான மேடை விசேடமாக அமைக்கப்பட்டுள்ளது. திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இவ்வாற்றுகைக்கு திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குனர் யோ.ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்துள்ளார். இதற்கான இசையமைப்பை கு.அற்புதன் வழங்குகின்றார்.

திருப்பாடுகளின் காட்சி ஆரம்பமாவத ற்கு முன்பாக ஒவ்வொரு நாளும் அருளுரைகள் இடம்பெறும். இவற்றை முறையே செ.நேசக்குமார், இ.ம. ஜெயசீலன், திருமதி சுனித்தா வெனான்சியஸ், அருட்சகோதரி ம.அருள், அருட்திரு.மேர்வின் பெர்னாண்டோ , அருட்திரு.ஜெருபெல் கிருபாகரன், அருட்திரு . பயஸ் இருதயதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளார்கள். (2-6)








சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட முன்னாள் உப அதிபர் திருமதி ரு.இராஜரட்ணத்துடன் சங்க உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதையும், மாதர்சங்க உறுப்பினர்களின் நாடகத்தையும், மேற்படி நிகழ்வையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் பெற்றிபெற்றவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.றஞ்சனா பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- சாவகச்சேரி நிருபர்)

# இலங்கை அகதிகளின் பாதுகாப்புகளை குறைப்பது ஆபத்தான செயல்

## அமெ.தமிழ்.அரசியல் நடவடிக்கை சபை

இலங்கையில் இருந்து வெளி நாடுகளில் அகதித் தஞ்சம் கோரும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்களை ஐ.நா.வின் அகதிகளுக்கான அமைப்பு குறைக்கப்போவதாக அறிவித்துள்ளது. ஆனால் இது தமிழ் மக்களை ஆபத்தில் தள்ளும் என அமெரிக்காவை தளமாகக்கொண்ட தமிழ் அரசியல் நடவடிக்கை சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, ஈழத்தமிழ் அகதிகளுக்கான பாதுகாப்புக்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு தளர்த்த உள்ளதாக தெரிவித்துள்ளது. இது இலங்கையில் மோசமடைந்துவரும் வன்முறைகளால் இடம்பெயர்ந்துவரும் மக்களை அதிகம் பாதிக்கும்.

தற்போது தற்காலிகமாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள பெருமளவான தமிழ் மக்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவர்கள் அங்கு கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படும் நிலைகள் ஏற்படலாம்.

தற்போதைய இலங்கை அரசினால் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களை பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் இருந்து இடம்பெயர்ந்து வரும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கள் தொடர்பான முடிபுகளை எடுப்பதற்கு தற்போதைய காலம் அனுகூலமானதல்ல என அது மேலும் தெரிவித்துள்ளது. (2-6)

# சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு செய்யப்பட்டுள்ளது

## வர்த்தக நுகர்வோர் துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மண்ணெண்ணை, டீசல், பெற்றோல் ஆகியவற்றின் மீதானவரிகள் நீக்கப்பட்டுள்ளதுடன் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளிலும் குறைப்புச் செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதன்படி சிவப்பு அரிசி 56 ரூபாவிலிருந்து 52.50 சதமாகவும் இதேவேளை நாட்டரிசி 45 ரூபாவாகவும், பாஸ்மதி அரிசி 69.50 சதத்திலிருந்து 65 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மீன்ரின் ஒன்றின் விலை 149 இலிருந்து 130 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு 58 ரூவாலிருந்து 52 ரூபாவாகவும், நெத்தலிக்கரு வாடு 270 ரூபாவிலிருந்து 250 ரூபாவாகவும், கடலை 139 ரூபாவிலிருந்து 137 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-6)


**சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்**

**Kids park Pre School and day care center**

**528, பலாலி வீதி, திருநெல்வேலி.**

அனேக வேலை செய்யும் தாய், தந்தையர்களின் வேண்டுகோள்களுக்கு இணங்க எதிர்வரும் சித்திரைப் புதுவருடத்திலிருந்து எம் நிபுணத்துவ சேவையை வழங்கவுள்ளோம்.

- உலகிலேயே தலைசிறந்த முன்பள்ளிக் கல்வி வழங்கும் ஜேர்மன்,அமெரிக்கா யப்பான் முறைகளுடனும் எமது பாரம்பரியங்களுடனும் !
- ஆங்கிலம்- தாய்மொழி மூல பயில்வு , விளையாட்டு , ஆடல், பாடல் , பன்முகநுண்மதி களிமண் பிசைவிலிருந்து கணனிக் கற்கைவரை!
- பாதுகாப்பான- ரம்மியமான சூழலில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் அரவணைப்பு- அர்ப்பணிப்பு!
- இரண்டு வயதிலிருந்து ஐந்து வயது வரை தனித்தனியான கவனிப்புடன் விளையாடி - கற்று , உணவு உண்டு , உறங்கி மகிழ்வான வாழ்வு வாழ (விரும்பின் பகல் முழுவதும்)! ஆசிரியர்களே வானில் வீடுவந்து அழைத்து மீண்டும் வீட்டில் விடும் வசதி!

வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு.

ஏப்ரல் 5 ஆம் திகதிக்கு முன் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர் ,
சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
528,பலாலி வீதி , திருநெல்வேலி.

தொடர்புகளுக்கு: 077 9360607 (907)


# தவத்திரு வே.முருகேசு சுவாமிகள்

## அவர்களின் 13ஆம் ஆண்டு குருபூசை தினம்



**இடம் :-** சந்நிதியான் ஆச்சிரமம்

**காலம்:-** 24.03.2010 புதன்கிழமை

**சிறப்பு இசைச் சொற்பொழிவு :-**

"குருவாய்அருள்வான்" (பக்கவாத்தியசகிதம்)

**வழங்குபவர் :-** கவிமணி க.ஆனந்தராசா அவர்கள் (அன்னைதாசன், இளைப்பாறிய அதிபர்)

மேற்படி குருபூசை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளுடனும் அறுபத்துமூவர் குருபூசையுடனும் நிறைவு பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் குருபூசை தினத்தில் பங்குபற்றி குருவருளையும் திருவருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

*சுபம் சாந்தி*

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு

தவத்திரு முருகேசு சுவாமிகளின்
அடியார்கள் சார்பில்
ஆ.அருணாசலம்.

(சு/4758)


**Suntel**
*Your telecom partner for life*

# தொலைத் தொடர்பில்

யாழ் மண்ணில் மிகச் சிறந்த சேவையினை வழங்கிவரும் Suntel நிறுவனம் தனது வடமராட்சி வாடிக்கையாளர்களின் நலன் கருதி இரண்டாவது கிளையினை இன்றிலிருந்து (22.03.2010) நெல்லியடியில் ஆரம்பித்து வைக்கின்றது.

இல-19
விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
நெல்லியடி.
T.P.: 021 4920002/3

(சி.4611)






யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்வி பணிமனையின் பிரதம பொறியியலாளர் எஸ்.சிவபாலன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.மாணிக்கராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், அதிபர் உரையாற்றுவதையும் திருமதி எஸ். சிவபாலன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# 435 கிலோ பரல் குண்டுகள் புளியங்குளத்தில் மீட்பு

(புளியங்கும்)

புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த 435 கிலோ நிறை கொண்ட பரல் குண்டுகளை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

45 கலன் கொள்ளளவு கொண்ட இரண்டு பரல்களில் தயாரிக்கப்பட்ட இவ்வெடி குண்டுகள் இரண்டும் புளியங்குளம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. கைதாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவர் வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இக்குண்டுகள் இரண்டும் மீட்கப்பட்டன.

முதலாவது குண்டு ரி.என்.ரி. வெடிபொருட்கள், இரும்புத் துண்டுகள், இருப்பு குண்டுகள் நிரப்பப்பட்டு சுமார் 261 கிலோ நிறை கொண்டது என்றும், இரண்டாவது குண்டும் இதே போன்று ரி.எம்.ரி. வெடிமருந்து மற்றும் இருப்புத் துண்டுகள் நிரப்பப்பட்டு சுமார் 174 கிலோ நிறை கொண்டவையாகவும் இருந்தன என விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

இக்குண்டுகள் வெடிக்கும் பட்சத்தில் 360 பாகைக்கு வெடித்துச் சிதறுவதுடன் பாரிய அழிவை ஏற்படுத்தியிருக்கும் எனவும் தெரிவித்தனர். இவ்விரு குண்டுகளுடன் ஜொனிபட்டா என்றழைக்கப்படும் 10 மிதி வெடிகளும் மீட்கப்பட்டுள்ளன. (ந)

# நாடு கடத்தும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தியது-சுவிஸ்

அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களை திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை சுவிற்சர்லாந்து அரசு தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

சுவிற்சர்லாந்தின் சூரிச் நகர விமான நிலையத்தில் நைஜீரிய நபர் ஒருவர் இறந்தது குறித்து விசாரணைகள் முடிவடையாமல் உள்ள நிலையிலேயே இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

போதைவஸ்து கடத்திய குற்றச்சாட்டில் குற்றங்காணப்பட்டிருந்த அந்த நபரை லாவோஸுக்கு விமானத்தில் ஏற்றி அனுப்புவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்ட போது அவர் இறந்துள்ளார்.

பொலிஸார் அவரை கட்டி வைத்ததன் காரணமாகவே, உடல்நிலை பாதிக்கப்பட்டு இறந்திருக்கலாம் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது..

இந்நெருக்கடிகளை சமாளிக்கவே, தஞ்சம் மறுக்கப்பட்டவர்களை திருப்பியனுப்பும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இலங்கை உட்பட்ட பல நாடுகளைச் சேர்ந்த, அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட நிலையில் பாதிப்பிற்குள்ளாகி இருந்தவர்களுக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது சுவிஸ் அரசாங்கம் என பலரும் தெரிவித்துள்ளனர். (ந)


தமிழ்க் காங்கிரஸ் கட்சி
(தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி)
தன்னை உயர்த்துவதற்கு
அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்வாதி.
மக்களை உயர்த்துவதற்கு
அரசியலைப் பயன்படுத்துபவன் அரசியல்ஞானி.
எமது ஆசிரியர் அரசியல்வாதியல்ல.
S.வரதராஜன்
-முதன்மை வேட்பாளர்-
(ரெபல பொருளியல் ஆசிரியர், முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்)

X 10
பழைய மாணவர்கள்




# நாடாளுமன்ற பொதுத் தேர்தல்-2010

உள்ளொன்று வைத்து புலிகளுடன் உறவுகொண்டவர்கள் புலிகளை அழிப்பதற்குச்சதி செய்தனர். தம்பி பிரபாகரனுக்கு நான் ஆலோசனை வழங்கினேன். எனது ஆலோசனையின் உண்மைத் தன்மையைப் புரியாமல் சதிக்கூட்டத்தை நம்பி எல்லாம் இழந்த வரலாற்றை தமிழ் மக்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள். வன்னியில் மிகப்பெரும் யுத்தம் நடக்கப் போகும்செய்தி கூட்டமைப்பிற்குத் தெரியாதா? எங்கே அவர்கள் சத்தியம் செய்யட்டும்.

வன்னி யுத்தம் நடந்தபோது அந்த இருபத்திரெண்டு பேரும் எங்கே? இருந்தனர். என்ன? செய்தனர். மக்களே உரத்துக் கேளுங்கள்.

வீ.ஆனந்தசங்கரி



**அன்பிற்கினிய தமிழ் மக்களே!**

விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னர் மாபெரும் சதித்திட்டம் நடக்கப் போகிறது.

விடுதலைப்புலிகளுடன் இருந்து தங்கள் பதவியைப் பாது காத்தவர்கள் இப் போது புலிகளை விமர்சிக்கின்றனர்.

புலிகளின் முன்னிலையில் கைகோர்த்து ஒன்று சேர்ந் தவர்கள் இப்போது உடைந்துபோயினர். அப்படியானால் உடைந்தவர்களில்யார் உண்மையான விசுவாசிகள். எவருமே இல்லை. விடுதலைப்புலிகளை ஒழிப்ப தற்கும் வன்னிப் பெருநிலப்பரப்பை அழிப் பதற்கும் ஒன்று சேர்ந்த கூட்டமைப்பு சாதித்து விட்டது. இப்போது போலி வேடத் தில், பொய்ப் பிரசாரத்தில் வாக்குகளைப் பெற்று பதவிகளை அலங்கரிக்க மேடை யேறிவிட்டனர்.

பாசமிகு தமிழ்மக்களே! உங்கள் நேசத் திற்குரிய உதயசூரியனை ஆதரியுங்கள். ஆனந்தசங்கரியை பாராளுமன்றம் அனுப் புங்கள். துணிந்தவீரன், அரசியலில் பழுத்த அனுபவசாலி, தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதி கள் சோடை போவதைத் தடுத்து நிறுத்தும் வல்லமை கொண்டவர். அவர் குரலுக்கு உலக நாடுகள் செவிசாய்க்கும் உங்கள் வாக்குகளை வீ.ஆனந்தசங்கரிக்கு அளி யுங்கள். மீண்டும் கதிரவன் ஒளியில் காரி ருள் மறையட்டும். உதயசூரியன் உதிக்கட் டும். தமிழர் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கட்டும்.

குடாநாட்டு வர்த்தகர்கள்.

# வீ.ஆனந்தசங்கரி

## தமிழர் விடுதலைக் கூட்டணி

X 1

(சி-4730)

கொமர்ஷல் வங்கியின்

# பொற் கடன்
# அடகுச் சேவை



## அதிகூடிய தொகை
## குறைந்த வட்டி

CBCMarketing

தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்

வங்கி மேலதிகப் பற்று வசதி

உயர்ந்த இரகசியத் தன்மை

பாதுகாப்பு உறுதி

குறைந்த வட்டி வீதம்




COMMERCIAL BANK

2010ம் ஆண்டு மார்ச் 22ம் திகதி முதல் நெல்லியடி,
சுன்னாகம் கிளைகளில் அடகுச்சேவை வசதி


IOC
Lanka IOC
SERVO
SERVO 2T SUPREME
2 STROKE ENGINE OIL
SERVO 4T
SERVO SUPER DS 40
DIESEL ENGINE OIL
நம்பிக்கையான பாதுகாப்பு இப்போது,
யாழ் மண்ணிலும்...
சர்வதேச தரம் வாய்ந்த சேர்வோ வாகன எண்ணெய் தெரிவுகள் உங்கள் வாகனத்தின் ஆயுளையும் பலத்தினையும் பெருக்கிடும்.
தொடர்புகளுக்கு அழையுங்கள்: அஷ்வினி மல்டி ப்ளாஸா, தொ.பே: 021-5677777
SERVO LUBRICANTS


பொதுத் தேர்தல்-2010 யாழ். மாவட்டம்
பிரதிநிதித்துவத்தை
அதிகரித்து
பேரம் பேசும் சக்தியை
வழங்குவோம்.
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)
8
எஸ்.ஸ்ரீகஜன்
(பத்திரிகையாளர்)
10
ஐக்கிய தேசிய கட்சி
X


தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
மக்களெல்லாம்...
மக்களெல்லாம்...
தமிழ் தேசியத்தின் பக்கம்...
மக்கள் படை என்றைக்கும்.
தமிழ் தேசியத்திற்கான
முன்னணியுடனே இருக்கும்
என்பதை உணர்த்திட
வாக்களிப்போம்.
உண்மையின் வடிவம்
உறுதியின் நிலையம்.
தமிழ் தேசியமே... தனது
தணியாத தாகமாக
உறுதியோடு பயணிக்கும்
உங்கள் நம்பிக்கை தலைவன்
திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
2
திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
அவர்களை வெற்றிவாகை சூடவைப்போம்
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
X

யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நேற்று கணிதப் பாசறை நடைபெற்றது.யாழ். பெரியபுலம் ம.வி.,உயரப்புலம் ம.வி.,கொக்குவில் ஞானபண்டித வித்தி,கொக்குவில் நாமகள்,யாழ்.இளையதம்பி வித்தி, கொக்குவில் இராதகிருஷ்ணவித்தி ஆகியன இணைந்து நடத்திய இந்நிகழ்வில் யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கணிதப் பாசறையை பார்வையிட்டார்.

# இம் மாதம் 29 இலங்கை அகதிகள் மண்டபம் முகாமுக்கு சென்றுள்ளனர்

(கொழும்பு)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நாடு திரும்புவதில் ஆர்வம் செலுத்தி வருவதாக செய்திக்ள வெளியாகி வரும் நிலையில் இந்த மாதத்தில் மட்டும் 29 பேர் இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாக சென்றுள்ளார்.

விமானம் மூலம் வந்த 26 பேரும் படகு மூலம் வந்த மூவரும் மண்டபம் அகதி முகாமில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். என தமிழ்நாடு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து மார்ச் மாதம் 13 ஆம் திகதி வரையில் 156 பேர் இலங்கையிலிருந்து அகதிகளாகத் தமிழகம் வந்துள்ளமை தமிழக அதிகாரிகளின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

ஜனவரி மாதத்தில் விமானம் மூலம் 72 பேரும் படகுகள் மூலம் 7 பேரும் வந்துள்ளனர். பெப்ரவரி மாதத்தில் வான் வழியாக 48 அகதிகள் மண்டபம் வந்து சேர்ந்தள்ளனர்.

இலங்கையில் தொடர்ந்தும் இனப்பதற்றம் நிலவுவதும் தாம் பாதுகாப்பாக இல்லை என்று தமிழர்கள் எண்ணுவதுமே அவர்கள் தொடர்ந்தும் அகதிகளாகத் தமிழகம் வருவதற்கான காரணம் என்று உதவிப் பணியாளர் ஒரு தெரிவித்தார்.

இதேவேளை யுத்தம் முடிவடைந்துள்ளதை அடுத்து இலங்கைக்குச் சென்று உறவுகளையும் சொத்துக்களையும் பார்த்து வருவதற்கு தமிழகத்தில் உள்ள அகதிகளில் பலர் விருப்பம் தெரிவிக்கின்றனர்.

எனினும் தாம் இந்தியாவில் இருந்து வெளியேறினால் மீண்டும் தமிழகம் திரும்ப முடியாது என்ற அச்சத்தில் உள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(2-6)

# 2012 ஆம் ஆண்டளவில் மலேரியா முற்றாக ஒழியும்

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டளவில் இலங்கையில் மலேரியாவை முற்றாக ஒழிக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பு ஆலோசனை வழங்கியிருந்த போதிலும் அதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே அந்த இலக்கை எட்டக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாக சுகாதார அமைச்சின் மலேரியா தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது.

வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வருடம் மலேரியாவால் பீடிக்கப்பட்டவர்களில் கூடுதலானவர்கள் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளிலேயே இனம் காணப்பட்டுள்ளனர்.

மலேரியா நோய் தடுப்புக்கு பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் மலேரியா காணப்படும் பிரதேசங்களுக்குச் செல்கின்றவர்களுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சின் மலேரியா நோய் தடுப்புப் பிரிவு மக்களைக் கேட்டுள்ளது.

(ந)

# வடக்கின் உற்பத்தி பொருட்கள் கிழக்கில்

(கொழும்பு)

கால் நூற்றாண்டு காலத்துக்குப் பின்னர் வடக்கின் உற்பத்திப் பொருட்கள் கிழக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.இதன் காரணமாக இப்பொருட்களின் விலையும் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

உருளைக்கிழங்கு, வெங்காயம், தக்காளி , வாழைப்பழம் மற்றும் நெல்லிரசம், நல்லெண்ணெய் முதலிய பொருட்கள் கிழக்குக்கு மட்டுமன்றி மரக்கறி வகைகளுக்கு பிரசித்தி பெற்ற தம்புள்ள போன்ற இடங்களுக்கும் லொறிகளில் கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(6)

சுரேஸ் க. பிறேமச்சந்திரன்



நிலையானதும்
வலுவானதுமான
தீர்வை நோக்கி..





இலங்கை தமிழரசுக்கட்சி

(தி-4728)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

# பாராளுமன்ற பொதுத் தேர்தல்-2010 யாழ். மாவட்டம்

## சுயேட்சைக் குழு-03




பி.ஜே.அன்ரனி (மாஸ்ரர்)
(சட்டத்தரணி)
முதன்மை வேட்பாளர்





செல்லப்பா சதானந்தன் (மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)




நடராசா தமிழ்அழகன்
(தொழிலதிபர்)




உருத்திராதேவி சண்முகநாதன்
(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்)





கந்தன் இராசரத்தினம் (மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற அதிபர்)







காத்தி அதிகாரம்
(பிரபல வர்த்தகர்)

**எம்.சி.சுப்பிரமணியம்**
காட்டிய வழியில்...
ஒடுக்கப்பட்ட சமூக மக்களின்
அரசியல் பிரதிநிதித்துவத்தை
வலுப்பெற வைக்க எமக்கு வாக்களியுங்கள்




தம்பியான் கந்தையா
(இளைப்பாறிய அரச ஊழியர்)





வயிரவன் மோகநாதன்




பிலிப் ஜோன் கபாஸ்
(கலைஞர்)




குணசிங்கம் கோபிநாத் (வேலணை)
(பல்கலைக்கழக மாணவன்)




சுப்பிரமணியம் மகேந்திரராஜா
(முன்னாள் பொது முகாமையாளர்
ப.நெ.வ.அ.கூ.ச. பூநகரி)

## அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை

(659)

**சுயேட்சைக்குழு-03**



X

## வவுனியா பி.செ.பிரிவில்

# இடம்பெயர்ந்து வாழும் மக்கள் வாக்களிக்க விசேட போக்குவரத்து

(கொழும்பு)

அண்மைக்கால அசம்பாவித சம்பவங்களால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து நண்பர்களுடனும் உறவினர்களுடனும் தங்கி வாழும் இடம் பெயர்ந்த வாக்காளர்களில் தமது தற்போதைய இருப்பிடத்திலிருந்து வாக்களிக்கும் வசதி கோரி விண்ணப்பிக்காதவர்களும் விண்ணப்பித்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களும் வாக்களிப்பதற்காக உரிய வாக்களிப்பு நிலையத்திற்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன என வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் சகல பிரிவுகளிலுமுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, வவுனிக்குளம் யுனிற் -2 அ.த.க.பாடசாலை, பாண்டியன் குளம் அரசினர் த.க.பாடசாலை, நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை , விநாயகபுரம் அ.த.க.பாடசாலை, துணுக்காய் அ.த.க. பாடசாலை, உயிலங்குளம் அ.த.க.பாடசாலை, மல்லாவி மகா வித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், அம்பலப்பெருமாள் குளம் அ.த.க.பாடசாலை, புத்தவெட்டுவான் அ.த.க. பாடசாலை, முத்து ஐயன்கட்டுக்குளம் இடதுகரை பாடசாலை, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை, சின்னத்தம்பி இந்துவித்தியாலயம், மாவட்டப் பயிற்சி நிலையம் மாங்குளம், திருமுறிகண்டி அ.த.க.பாடசாலை, வற்றாப்பளை மகாவித்தியாலயம் ஆகிய வாக்களிப்பு நிலையங்களுக்கு வாக்களிக்கச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஏனைய (மீளக்குடியமர்த்தப்படாத பகுதிகளுக்கான) வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பவர்கள் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று வாக்களிக்க முடியும்.

இது இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மாத்திரமேயாகும் என்பதுடன் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான அடையாள ஆவணங்களில் ஒன்றையேனும் தம்வசம் கொண்டு செல்லுதல் வாக்களிப்பதற்கான கட்டாய தேவையாகும். போக் குவரத்து வசதிகள் தேவைப்படுபவர்கள் தாம் 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் வாக்காளராகப் பதியப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வவுனியா மாவட்ட செயலகத்தில் இதற்கென அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் தமது பெயர்களை 31.03.2010க்கு முன்னர் பதிவுசெய்ய வேண்டும்.

பதிவுபெற்றவர்கள் 08.04.2010 வாக்களிப்பு தினத்தன்று காலை 6 மணிக்கு உரிய வாக்களிப்பு நிலையத்திற்கு வாக்களிக்கச் செல்லும் ஆயத்தங்களுடன் வ/காமினி மகா வித்தியாலய மைதானத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள், உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்கள் வாக்களிக்க வசதி கோரி விண்ணப்பித்தவர்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாக்காளர்களின் பட்டியலையும் அவர்களுக்கான வாக்களிப்பு நிலையத்தையும் வவுனியா செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## தேசநிர்மாண அமைச்சு மூலம்

# 1036 இணையக் கிராமங்கள் உருவாக்கம்

தேச நிர்மாண அமைச்சின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் 1036 இணைய கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. கே.கே. குமாரசிறி தெரிவித்தார்.

இந்தக் கிராமங்களுக்குத் தனித்தனியான இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அனைத்துக் கிராமங்களையம் ஒரே இணையத்தளத்தில் அறிந்துகொள்ளவும் கிராமத்துக் கிராமம் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கூறினார்.

www.gamaneguma.lk என்ற இணையத்தில் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்ளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதேபோன்று 1168 கிராமங்களுக்கு இணையத்தளங்களை உருவாக்கும் திட்டத்தில் இதுவரை 1036 கிராமங்கள் பூர்த்தி செய்ப்பட்டுள்ளன. (6)

# சிறிய நடுத்தர தொழில் முயற்சி கடன் திட்டம்

## மத்திய வங்கியால் அறிமுகம்

மீள்ச்சி பெற முடியாமல் நெருக்கடியில் சிக்கியுள்ள இலங்கையின் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு மீள் நிதி கடன் திட்டமொன்றை மத்திய வங்கி ஆரம்பித்திருப்பதாக சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

100 சதவீத மீள்நிதி திட்டமானது வங்கிகளூடாக மேற்கொள்ளப்படும். 8 சதவீத வட்டியுடன் கடன் வழங்கப்படும். ஆகக் கூடுதல் தொகையாக 2 கோடி ரூபா வரை தற்போது இயங்கும் நிறுவனங்கள் மீள்ச்சி பெறுவதற்கு உதவியளிக்கப்படும் என்று மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்த பணிப்பாளர் டபிள்யூ. எம்.கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

தொழில் முயற்சியாளர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து 15 வீதத்தை முதலீடு செய்ய வேண்டும்.மீதி 85 சதவீதத்தை வங்கி வழங்கும். மீள் நிதித் திட்டமானது உடனடியாக 50 கோடி ரூபா நிதியத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென அவர் கூறியுள்ளார்.

மத்திய வங்கியின் சுழற்சிக் கடன் நிதியத்திலிருந்து இந்த நிதி வழங்கப்படுமென மத்திய வங்கியின் ஆளுநர் அஜித்நிவாட் கப்ரால் கூறியுள்ளார்.இதனைச் செய்வதற்கு புதிதாகப் பணத்தை நாங்கள் அச்சிடமாட்டோம் என்று அவர் தெரிவித்தார்.

சுழற்சிக்கு விடப்பட்டிருக்கும் 11.8 பில்லியன் ரூபா நிதியூடாகவே பல செயற்றிட்டங்களை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளது. விவசாயம், கால்நடை, மீன்பிடித்துறை, வறுமை ஒழிப்புப் போன்றவற்றுக்கான கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்த நிதி வழங்கப்படுகிறது. (2-6)

# நுவரெலியா மாவட்டத்தில் பாரிய குடிநீர் தட்டுப்பாடு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் குடிநீருக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுவதாக மாவட்ட செயலர் ஜி.பி.ஜி.குமாரசிறி தெரிவிக்கிறார். இதன் காரணமாக மாவட்டத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தற்போது மாவட்டத்தில் உள்ள நகரங்களுக்கும் தோட்டப்புறப் பகுதிகளுக்கும் குடிநீரை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கமைய குடிநீரை விநியோகிப்பதில் ஏற்பட்ட பிரச்சினை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதாக மாவட்ட செயலர் ஜி.பி.ஜி. குமாரசிறி தெரிவித்தார்.

இதனை அடுத்து பவுஸர்கள் மூலம் குடிநீரை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குடிநீர்த் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்கள் குறித்து பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபைகள் ஊடாக தகவல்கள் திரட்டப்படுவதாகவும் இந்தத் தகவல்களுக்கமைய தட்டுப்பாடு நிலவும் சகல பகுதிகளுக்கும் உடனடியாக பவுஸர்கள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுமென நுவரெலியா மாவட்ட செயலாளர் ஜி.பி.ஜி.குமாரசிறி மேலும் தெரிவித்தார்.

(2-3)



சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி கிளையினரால் 2009 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் சுன்னாகம் மயிலணி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த உடுவில் மகளிர் கல்லூரி மாணவி க.அபிராமிக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஆ.சரவணபவன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# ஈழத் தமிழர்களுக்கு தொடர் சோதனை நியாயமா?-புதிய தமிழகம் கிருஸ்ணசாமி

இலங்கை உள் விவகாரத்தில் தலையிட முடியாது என சொல்லும் இந்திய அரசு இந்திய நாட்டு விமான நிலையங்களில் அந்நியநாட்டு விமானப் பயணிகளை சோதிப்பதை போல இலங்கை விமான நிலையங்களில் இந்திய அதிகாரிகள் அந்தநாட்டினுடைய பூர்வீகக் குடிமக்களையே சோதிப்பது எந்த விதத்தில் நியாயம் என்று புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 21ஆம் நூற்றாண்டில் மிகப் பெரிய இனப்பிரச்சினைக்கு ஆளான நாடு இலங்கை இனப்பிரச்சினையில் அதிகம் பாதிப்புக்கு ஆளான மக்கள் ஈழத் தமிழ் மக்கள் இனப்பிரச்சினை காரணமாக ஈழத் தமிழர்கள் இந்தியா, ஐரோப்பா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்தனர். பல நாடுகளில் குடியுரிமை பெற்றனர்.

அவர்களில் பலர் தாயகம் திரும்ப தொடங்கியுள்ளனர். இவர்களில் லண்டன் வாழ் தமிழர்கள் கொழும்பு வரும்போது விமான நிலையத்தில் அவர்களை ஸ்ரீலங்கா அதிகாரிகள் சட்டபூர்வமாக பரிசோதனைக்கு உட்படுத்துகிறார்கள். இந்த சோதனை நியாயமானது. ஆனால் கொழும்பு விமான நிலையத்தில் இலங்கை அதிகாரிகள் சோதனை நடத்திய பிறகு இந்திய அதிகாரிகள் மீண்டும் ஒரு சோதனை நடத்துவதாக தகவல்கள் வருகின்றன.

கொழும்பு திரும்பும் தமிழ் மக்களை இந்திய அரசு அதிகாரிகள் சோதிப்பது உண்மையாக இருக்கும் பட்சத்தில் இது மிக மிக கண்டிக்கத்தக்கது. உடனே இந்திய அரசு வெளியுறவுத்துறை தமிழ் மக்களுக்கெதிராக தொடரும் இந்த மனித உரிமை மீறலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பல்லாண்டுகளுக்கு குடியேறி அங்கு குடியுரிமை பெற்று இன்னும் அகதிகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தங்கள் உறவினர்களைக் காண ஆவலோடு என்றாவது ஒருநாள் இந்தியா வரும் பொழுது விமான நிலையத்திலேயே அவர்கள் அதே நாட்டிற்கே திருப்பி அனுப்பி வைக்கப்படும் கொடுமைகளும் ஓசையின்றி பலகாலம் நடந்து வருகிறது என்றார். (2-6)

# 11 வாரங்களில் 10ஆயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

## தொற்று நோய் ஆய்வுப் பிரிவு

(கொழும்பு)

நாட்டில் கடந்த பதினொரு வாரங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தினையும் தாண்டியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்து 212 பேரில் ஆயிரத்து 753 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இதன்படி டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டமே முதன்மை பெறுகின்றது.

இதற்கு அடுத்ததாக கம்பஹா மாவட்டத்தில் ஆயிரத்து 279 பேரும் கொழும்பு மாவட்டத்தில் ஆயிரத்து 264 பேரும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. (2-6)

# புதிய நாடாளுமன்ற பிரதமர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரை



(கொழும்பு)

எதிர்வரும் புதிய நாடாளுமன்றத்தின் பிரதமர் பதவிக்காக மூன்று பேரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெருந் தோட்ட அமைச்சர் டி.எம். ஜயரட்ன, சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் விவசாய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

குறித்த மூவருக்கும் பிரதமர் பதவியை வகிப்பதற்கு உரிய தகுதிகள் காணப்படுவதாகவும் இவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

எவ்வாறெனினும் பிரதமர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் ஜனாதிபதி இதுவரையில் தீர்மானிக்கவில்லை எனவும் யாரை பிரதமராக நியமிப்பது என்பதை அவரே தீர்மானிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் புதிய பிரதமர் ஒருவரை நியமித்தால் அதற்கு தற்போதைய பிரதமர் ரட்னசிறி விக்ரமநாயக்க எதிர்ப்பை வெளி யிடக் கூடுமெனக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# முக்கிய பிரமுகர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்க முடியாது

## பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

முக்கிய பிரமுகர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய இராணுவ பாதுகாப்பை வழங்குமாறு சில ஆளும் கட்சி அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கையை அமைச்சு நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இராணுவ வீரர்களை ஈடுபடுத்தவில்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றமில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு இடையில் அதிருப்தி நிலவிய போதிலும் அவர்கள் பகிரங்கமாக எதனையும் இதுவரையில் தெரிவிக்கவில்லை. எவ்வாறெனினும் முக்கிய பிரமுகர்களுக் கான பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் நடைமுறைச் சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக போதியளவு வாகன வசதிகள் காணப்படாமையினால் உரிய முறையில் பாதுகாப்பினை வழங்குவதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆனாலும் பாதுகாப்பு அமைச்சு உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் 147 முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் இதில் அநேகமானவர்களுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# களுகங்கையில் காப்பாற்றப்பட்ட குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(கொழும்பு)

களுத்துறை பௌத்த விகாரைக்கு அருகில் உள்ள களுகங்கையில் வீசப்பட்டிருந்த நிலையில் காப்பாற்றப்பட்டு கொழும்பு சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அமிலசந்துவான் என்ற குழந்தை உயிரிழந்துள்ளது.

2வருடங்களும் 8 மாதங்களும் நிரம்பிய இந்தக் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக பத்து மணித்தியாலங்களாக கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக அந்த வைத்தியசாலையின் டாக்டர் ஒருவர் கூறினார்.

நீரில் மூழ்கியதால் கடும் மூச்சுத்திணறல் ஏற்பட்ட இந்தக் குழந்தைக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

சகோதர, சகோதரிகள் 5பேரைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இந்தக் குழந்தை களுகங்கையில் வீசப்பட்டிருந்த நிலையில் லொறி சாரதி ஒருவரால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# கொக்காவில் பிரதேசம் இராணுவ மயப்படுகிறது

## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொக்காவில் பிரதேசம் இராணுவ மயப்படுத்தப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். கிரமமான முறையில் இந் நடவடிக்கை இடம்பெறுவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்கமைய இராணுவ முகாமொன்றை அமைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் நடைபெற்று வருவதாகத் தமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அங்கு பாரியளவிலான ஒளிபரப்புத் தூபியொன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் யாழ்ப்பாண குடாநாட்டில் மட்டும் சுமார் 40 ஆயிரம் படைத்தரப்பினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் அதிகளவிலான படை வீரர்கள் ஏன் வடக்கில் நிலை நிறுத்தப் பட வேண்டும். இராணுவத்தினரை குறைக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஓரிரு இடங்களில் இராணுவ முகாம்களை அமைப்பதில் தவறில்லை.எனினும் சகல இடங்களிலும் இராணுவ முகாம்களை அமைப்பதற்கு முனைப்பு காட்டப்பட்டு வரு கின்றது என்றார்.

எவ்வாறெனினும் இக்குற்றச்சாட்டுக்களை இராணுவம் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது. கொக்காவில் பகுதியில் ஏற்கனவே இருந்த இராணுவ முகாம் ஒன்றே தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு, பூநகரி, கிளிநொச்சி போன்றபிரதேசங்களிலும் ஏற்கனவே இராணுவ முகாம்கள் காணப்பட்டதாகவும் அவை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஏற்கனவே முகாம்கள் காணப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் முகாம்கள் அமைக் கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# புதிதாக ஆயிரம் பேர் கடற்படையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்

(கொழும்பு)

இலங்கையில் கடலோர காவற்பிரிவு மேலும் பலப்படுத்தப்படவுள்ளதுடன் இதற்கென எதிர்வரும் மாதங்களில் 900 கடற்படையினரும் மற்றும் 100 அதிகாரிகளும் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கடலோர காவற்பிரிவில் 4 படகுகளுடன் 200 பேர் பணியாற்றுகின்றனர். கொழும்பிலும் மிரிசேவிலும் 2 முகாம்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் ஒருமுகாம் அடுத்த 2 ஆண்டுகளில் நிறுவப்படவுள்ளது.

இலங்கையை சுற்றியுள்ள கடற்பரப்பில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு இந்த கடலோர காவற்பிரிவு நடவடிக்கை எடுக்கும் அதேநேரம் காணாமல் போன மற்றும் விபத்துக்குள்ளான கப்பல்கள், படகுகள் தொடர்பாக தேவையான உதவிகளை வழங்குவதற்கும் கடலோர காவற்பிரிவு நடவடிக்கை எடுக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரி கையெழுத்திட்ட ஆவணங்கள் அபகரிப்பு

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி பொது மக்களிடம் கையொப்பங்களைப் பெற்றுக் கொண்டிருந்தபோது அது தொடர்பான அனைத்துத் தஸ்தாவேஜுகளையும் ஆளும் தரப்பைச் சேர்ந்த பிரதியமைச்சர் ஒருவரின் ஆதரவாளர்கள் பலாத்காரமாக அபகரித்துச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்தி ஜனநாயக தேசிய முன்னணியினர் இரத்தினபுரி கஹவத்தைப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கையொப்பங்கள் சேகரிக்கும் பணியினை மேற்கொண்டிருந்தனர்.

அவ்வேளையில் இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதியமைச்சரின் ஆதரவாளர்க ளென நம்பப்படும் பலர் திடீரெனக் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து அங்கிருந்த தளபாடங்களை அடித்து நொருக்கியதுடன் கையொப்பங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகளையும் அபகரித்துச் சென்று விட்டதாக ஜனநாயக தேசிய முன்னணியின் சார்பில் இரத்தினபுரி மாவட்டத் தில் போட்டியிடும் வேட்பாளரான சமீர கொஸ்வத்தை பொலிஸில் முறைப்பாடு செய்யதுள்ளார். (6)

# நாட்டிலுள்ள கனியவளங்களை ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கை

நாட்டில் உள்ள கனியவளங்களை ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கைகள் ஆகாயத்தில் இருந்து விமானம் ஒளிப்படம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு புவிச்சரிதவியல் மற்றும் அகழ்வாராய்ச்சி பணியகம் விசேட செயற்றிட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் ஆகாயத்திலிருந்து இந்தக் கனியவள ஆராய்ச்சி நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படுமென பணியகத்தின் பணிப்பாளர் ஓ.கே.தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இதற்காக ரஷ்ய மற்றும் கொரிய நிபுணர்களின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளதுடன் சுமார் 47 கோடி அமெரிக்கடொலர்கள் இதற்குச் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# பஸ்ஸில் மோதுண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் மரணம்

அனுராதபுரம் சந்தமல்கமகந்தயில் பாதுகாப்பு படையினரை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்றில் மோதி கவலைக்கிடமான நிலையில் கொழும்பு சீமாட்டிவித்ய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளான்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இவ் விபத்தில் கடும் காயங்களுக்குள்ளான சிறுவன் அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகவே கொழும்பு சீமாட்டிவித்ய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தான். இவன் அனுராதபுரம் பகுதி பாடசாலையொன்றில் தரம் 6இல் கல்வி பயன்று வந்தவனாவான்.

இந்த விபத்து இடம்பெற்ற போது 11 வயது சிறுவன் ஒருவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பஸ் சாரதி அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டதை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (2-6)



ஜனாதிபதி விருதுக்கான சமூக சேவைத்திட்டத்தின் கீழ் வீரகத்தி விநாயகர் முன்பள்ளியில் சாரணர்கள் துப்பரவுப் பணியில் ஈடுபடுவதை படத்தில் காணலாம்.

## நேபாளத்தின் முன்னாள் பிரதமர்

# கிரிஜா பிரசாத் கொய்ராலா காலமானார்



நேபாளத்தின் முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா நேற்று முன்தினம் காலமானார்.

85 வயதான கிரிஜா பிரசாத் கொய்ராலா நான்கு தடவைகள் பிரதம மந்திரியாக இருந்தவர்.

நீண்ட நாட்களாக நுரையீரல் சம்பந்தமான நோயினால் அவஸ்தைப்பட்டு வந்த அவர் நேற்று முன்தினம் காலை உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது உடல் தேறி வருவதற்கான அறிகுறி தென்பட்ட நிலையில் கடந்த புதன்கிழமை அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறி காத்மண்டுவில் உள்ள அவரின் புதல்வியான சுஜாதா கொய்ராலா வீட்டில் ஓய்வெடுத்து வந்தார். எனினும் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

நேபாளத்தின் ஸ்திர சக்தியாக ஜி.வி. கொய்ராலா கருதப்பட்டு வந்தார். 1991 ஆம் ஆண்டு முதல் தடவையாக அவர் பிரதமராகப் பதவி ஏற்றார். 2006 ஆம் ஆண்டு மன்னர் கயனேந்திரா அதிகாரங்களை கைவிடக் கோரும் நடவடிக்கையில் மாவோயிஸ்டுகளுடன் அவர் இணைந்துகொண்டார்.

2006 ஏப்ரலில் ஏற்படுத்தப்பட்ட 7 கட்சிகளின் கூட்டரசாங்கத்தில் ஜி.பி.கொய்ராலா பிரதமராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரை அவர் பிரதமராகப் பதவி வகித்தார்.

தகவல் கிடைத்ததும் பெருந்திரளான மக்கள் வீட்டில் திரண்டனர். பிரதமர் மாதவ் குமார், நேபாள அமைச்சர்கள் ஆகியோர் அவர் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினார்கள். (2-6)

## அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தம்

# அமெரிக்கா , ரஷ்யா கையெழுத்து

(மொஸ்கோ)

அணு ஆயுத குறைப்பு ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கையெழுத்திட உள்ளன. இரு நாடுகளிடையிலான இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் அடுத்த மாதம் கையெழுத்தாகும் எனத் தெரிகிறது.

இத்தகவலை ரஷ்யாவிலிருந்து வெளியாகும் நாளிதழ் ***கோமர்சன்ட்*** தெரிவித்துள்ளது.

செக்கோஸ்லோவோகியா தலைநகர் பிராகில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது. இது ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்கிலாவ்ரோவ் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிலாரி கிளிண்டன் ஆகியோர் கையெழுத்திடவுள்ளனர்.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்வது தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களும் ஜெனீவாவில் பேச்சு நடத்தியுள்ளனர்.

அணு ஆயுதங்களை குறைப்பது தொடர்பாக இரு நாடுகளிடையே 1991 ஆம் ஆண்டில் போடப்பட்ட ஒப்பந்தம் கடந்த ஆண்டு டிசம்பரில் காலாவதியானது. இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் இது வரை எவ்வித முடிவும் எட்டப்படவில்லை.

இதற்கமைய கடந்த ஆண்டு ஜுலை மாதம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா மற்றும் ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வதேவ் ஆகியோர் இந்தப் புதிய ஒப்பந்தம் செய்து கொள்ள ஒப்புக்கொண்டனர். (2-6)

## பாதையில் பதிக்கப்பட்ட பற்றரி சார்ஜில்

# மின்சாரத்தைப் பெற்று ஓடும் பஸ்

## தென்கொரியாவில் பாவனை


(சியோல்)

தென்கொரியாவில் பாதையில் பதிக்கப்பட்ட பற்றரி மின்னேற்றல் மூலம் மின்சாரத்தைப் பெற்று ஓடும் பஸ் இயக்கப்பட்டு வருகிறது. தென்கொரியாவின் தலைநநகர் சியோலில் உள்ள பொழுதுபோக்கு பூங்காவில் மூன்று மின்சார பஸ்கள் இயங்குகின்றன. அவை செல்லும் பாதையில் சார்ஜர்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தடத்தின் மீது பஸ் ஓடும் போது மின்சாரத்தை பெறுகிறது.

சியோல் நகர மேயர் உள்ளிட்ட வி.ஐ.பிக்கள் இந்த பஸ்ஸில் இரண்டு கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்து சோதனை செய்தனர். இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தால், நகரம் முழுவதும் இதுபோன்ற பஸ்களை அதிக அளவில் விடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மின்சாரப் பற்றரி கலிபோர்னியா பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால், போதிய பலன் கொடுக்கவில்லை என்பதால், அமெரிக்காவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஆனால் தென்கொரியா இந்த பஸ்ஸை இயக்கி வருகிறது. மற்ற எலக்ரிக் வாகனங்களைப் போல இதற்கு நீண்டநேரம் சார்ஜ் செய்ய வேண்டியதில்லை. பராமரிப்புச் செலவும் குறைவு என்கின்றனர் வல்லுநர்கள். (2-6)

## வடகொரியா அணுத்திட்டம் தொடர்பாக

# அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் விவாதிப்பதற்கு சீனா முடிவு



(பீஜிங்)

வடகொரிய அணுதிட்ம்தொடர்பான 6 நாடுகள் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவது குறித்து அமெரிக்கா, ரஷ்யா,ஜப்பான் , வடகொரியா,தென்கொரியா ஆகிய 5 நாடுகளிடமும் விவாதிக்க சீனா முடிவெடுத்துள்ளது.

வடகொரியா அணுத்திட்டம் தொடர்பாக நடந்து வந்த 6 நாடுகள் பேச்சுவார்த்தை தடைப்பட்டு கிடக்கிறது. இந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவது தொடர்பான ஆயத்தக் கூட்டத்தைக் கூட்ட அமெரிக்கா உள்ளிட்ட 6 நாடுகள் திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில் இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்பாக 5 நாடுகளையும் அழைத்து அதிகா ரபூர்வமற்ற பேச்சுவார்த்தையை நடத்த சீனா திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு அரசு வட்டா ரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தை தலைநகர் பீஜிங்கில் கூட்ட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதில் சீனாவின் முயற்சி எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பது தெரியவில்லை.

ஆனால் தடைப்பட் டுள்ள வடகொரியா அணு திட்டம் தொடர்பான 6 நாடுகள் பேச்சுவார்த்தை மீண்டும் தொட ங்க இக்கூட்டம் பெரும் உதவியாக இருக்கும் என்று சீனா நம்புவதாகவும் அந்நாட்டு அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆக்கபூர்வமான விஷயங்களுக்கு மட்டுமே வடகொரியா அணுத் திட்டங்களைதீட்டி செயல்படுத்த வேண்டும் என்று சீனா விரும்புகிறது.

இதுகுறித்து அந்நாட்டிடம் பலமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் வடகொரிய துணை வெளியுறவு அமைச்சர் கிம் கே குவான் சீனா வந்த போதும் இதுகுறித்து வேண்டுகோள் வைக்கப்பட்டது என்று சீன அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர். (2-6)

# சனியின் சந்திரனான டைட்டானில் பனி மற்றும் பாறை உள்ளடக்கம்



சனிக்கிரகத்தின் சந்திரனான டைட்டானில் பனியையும் பாறைகளையும் கலவையாகக் கொண்ட உள்ளடக்கம் இருப்பது புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அமெரிக்கா நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் காஸினி விண்கலம் மேற்படி சந்திரனுக்கு மேலாக தாழப் பறந்து சேகரித்து அனுப்பிய தரவுகளை அடிப்படையாக வைத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டைட்டானின் ஈர்ப்பு இழுவிசையை நுட்பமாக மதிப்பீடுசெய்த நாசா விஞ்ஞானிகள் அதன் உள்ளடக்கம் மிகவும் குளிர்மையானது என்பதை கண்டறிந்துள்ளனர்.

இதன்பிரகாரம் அந்த உப கிரக உள்ளடக்கத்தில் பனியும் பாறைகளும் முழுமையாக தனித்தனிபடலங்களாக உள்ளதாக நம்பப்படுகிறது.இது தொடர்பில் காஸினி விண்கல ஆய்வுத்திட்ட விஞ்ஞானியான பொப்பப்பலார்டோ விபரிக்கையில், எமது சூரியக் குடும்பத்தில் மிகவும் குளிர்மையான இடங்களில் ஒன்றாக டைட்டான் விளங்குவது எமது ஆய்வின் மூலம் தெளிவாகியுள்ளது என்று கூறினார். (2-6)

## விமானத்தை கடத்தினால் மரணதண்டனை

# இந்திய விமானக்கடத்தல் தடுப்புச்சட்டத்தில் திருத்தம்

(சென்னை)

இந்தியாவில் விமானத்தைக் கடத்தினால் மரண தண்டனை வழங்கப்படும் இதற்கு வழி வகுக்கும் வகையில் விமானக் கடத்தல் தடுப்புச் சட்டம் திருத்தப்படுகிறது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கூடிய மத்திய அமைச்சரவை இந்த புதிய விதிமுறைக்கு ஒப்புதல் அளித்தது.

முக்கியப் பாதுகாப்பு மையங்களைத் தாக்கும் வகையில் விமானத்தைக் கடத்திச் சென்றால் அந்த விமானத்தை உடனடியாக சுட்டுவீழ்த்தவும் சட்டத்தில் திருத்தம் செய்யப்படுகிறது .

நியூயோர்க் இரட்டை கோபுரம் தகர்க்கப்பட்டது போன்ற முயற்சியைத் தடுக்கும் வகையில் இப் புதிய திருத்தம் அமுல்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் இனி எந்த விமானம் கடத்தப்பட்டாலும் அது எந்த நிலையிலும் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது.

இதற்கான திருத்தமும் 1982 ஆம் ஆண்டு விமானக் கடத்தல் தடுப்புச் சட்டத்தில் கொண்டு வரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

# இலங்கைக்கு வீட்டு உபயோக பொருட்களை கடத்த திட்டம்

## புலனாய்வுத்துறை விசாரணை

(இராமேஸ்வரம்)

இலங்கைக்கு வீட்டுப் பொருட்களைக் கடத்த திட்டமிட்டுள்ள கும்பல் குறித்து, புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தற்போது, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பலர், கடவுச்சீட்டு மூலம் இலங்கை சென்று, மன்னார் உள்ளிட்ட கடலோரப் பகுதியில் முகாமிட்டு இதற்கான வேலைகளில் ஈடுபட்டு வருவதாக இங்குள்ள புலனாய்வுத் துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது.

மீன்பிடி தொழில் சீராக இல்லாததால், வருமானத்திற்காக இதுபோன்ற கடத்தலுக்கு மீனவர்கள் சிலரும் துணைபோவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்களுடன் சேர்ந்து வீட்டு உபயோகப் பொருட்கள் கடத்தல் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட இருப்பது குறித்த தகவல் கிடைத்துள்ளதால், இராமேஸ்வரம், பாம்பன் மற்றும் மண்டபம் பகுதி கடத்தல் காரர்கள் குறித்து பல்வேறு தகவல்களை, தமிழக புலனாய்வுத் துறையினர் சேகரித்து வருகின்றனர்.

இதேவேளை இதையறிந்த இராமேஸ்வரம் பகுதி முன்னாள் கடத்தல் புள்ளிகளும், சமீபத்தில் கடவுச்சீட்டு விசாவில் அடிக்கடி இலங்கை சென்று வந்தவர்களும் தலை மறைவாகிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

நல்ல செயலைச் செய்ய நினைத்தால் உடனே செய்க. நாளும் கோளும் நல்ல செயல்களுக்கு சாதகமாகவே இருக்கும். -சுவாமி இராமதாசர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ். மாநகர சபைக்கு அடிக்கல் அதுவே யாழ். நகரை அளகாபுரியாக்கும் 'கல்'

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று இடம்பெறவுள்ளது.

யாழ். பிரதான வீதியில் யாழ். பொதுநூலகம் மற்றும் நீதிமன்றம் அமைந்துள்ள வளாகத்தில் இருந்த யாழ்ப்பாண மாநகர சபையின் பழைய கட்டிடம் யுத்தத்தின் கோரப்பிடிக்கு இரையாகிப் போனது.

தமிழ்ப் பாரம்பரியத்தின் அடையாளச் சின்னமாக விளங்கிய அந்த கட்டிடத்தின் அழகையும் பெருமையையும் அறிந்தவர்கள் அப்படியொரு கட்டிடம் மீண்டும் எழுந்து வராதா? என்று ஏங்கிய காலம் அதிகம்.

அந்த ஏக்கத்தைத் தணித்து அதே இடத்தில் அதே வடிவில் மீண்டும் யாழ்ப்பாண மாநகர சபையின் கட்டிடத்தொகுதி அமைக்கப்படுவது வரவேற்கப்படவேண்டிய விடயமாகும்.

பத்திரிகைகள் தவறானவற்றை மட்டும் சுட்டிக் காட்டுபவையாக இருக்கக் கூடாது அவை நல்ல செயல்களையும் பொதுமக்கள் முன் எடுத்துரைக்கும் கடமைப் பொறுப்பைக் கொண்டவை.

அந்தப் பொறுப்பை வலம்புரி தொடர்ந்து செய்து வருகிறது. அதேநேரம் பத்திரிகைகள் தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, அதனை விமர்சிப்பது அல்லது ஓரங்கட்டுவது என்பது சிறந்த முகாமைத்துவமாகாது.

எனினும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கக்கூடிய திணைக்களங்கள், அமைப்புகளில் பெரும்பாலானவை தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது கோபித்துக் கொள்கின்றன.

நல்லதைப் பிரசுரிக்க வேண்டும் என்று அவர்கள் நினைப்பது அவர்கள் மட்டில் நியாயமாக இருக்கலாம்.

ஆனால் பொதுமக்கள் அல்லது பாதிக்கப்படுபவர் என்ற தரப்புடன் ஒப்புநோக்கும் போது தவறுகள் சுட்டிக்காட்டப்படுவதுடன் அதனை நிவர்த்திப்பதில் உரிய பதவியை வகிப்பவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

இவ்வகையில், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் க.கணேஷ் அவர்கள் பத்திரிகையில் வெளிவருகின்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுடன், எடுக்கப்பட்ட நடவடிக்கையை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கும் சிறந்த நிர்வாக முறையை கடைப்பிடிப்பதை பல தடவைகள் அனுபவித்துள்ளோம்.

யாழ். அரச அதிபர்போன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் அத்தனை அமைப்புகளின் அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்களாயின் எங்கும் சிறந்த முகாமைத்துவம் மேலோங்கும்.

அஃது நிர்வாகத்தைச் சுலபப்படுத்தும். இந்த உன்னதமான நிலை எங்கள் மண்ணில் உருவாக வேண்டும்.

இதற்கு பொருத்தமான கட்டிடங்களும், அமைவிடங்களும் உதவி செய்யும்.

அவ்வகையில் யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு யாழ்ப்பாண மாநகரத்தை அளகாபுரியாக மாற்றுவதற்கான அடிக்கல் ஆகும்.

புதிய கட்டிடம் விரைவில் உதயமாக இறைவன் ஆசீர்வதிக்கட்டும். கட்டிடம் அமைக்கும் பணியுடன் சம்பந்தப்பட்ட அத்தனைபேரும் வரலாற்றில் பதிவாகுவர்.

# மெராக் துறைமுக அகதிகளை மீட்க ஒபாமா தலையிட வேண்டும்

## ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கடிதம்

இந்தோனேசியா மெராக் துறைமுகத்தில் உள்ள இலங்கை அகதிகளை விடுவிப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலையிட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பினால் இது தொடர்பான கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இணையத்தள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இந்தோனேசியாவுக்கு வலியுறுத்த வேண்டும் என அந்த கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஒபாமா தமது சிறுபராயத்தில் சில காலங்கள் இந்தோனேசியாவில் வசித்து வந்துள்ளார்.

அத்துடன் அவர் இன்னும் சில நாட்களில ஆசிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் தீர்மானத்திலும் உள்ளார்.இந்த நிலையில் பல மாதங்களாக படகில் உள்ள தமிழ் அகதிகளின் நிலவரம் குறித்து சிந்திக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களுக்கு முறையான தீர்வு வழங்குவது குறித்தும் அவுஸ்திரேலியா மற்றும் இந்தோனேசிய அர சாங்கங்களுக்கு வலியுறுத்த வேண்டும் எனவும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (2-6)

## விருப்பு வாக்குகளுக்காக பிளவு வேண்டாம் -பசில்

(கொழும்பு)

விருப்பு வாக்கு முறையினை வாதப்பொருளாகக்கொண்டு வேட்பாளர்கள் பிளவுபட்டால் வாக்காளர்களே பாதிக்கப்படுவார்கள் என ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

கம்பகாவில் நடைபெற்ற மகாசங்க சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இதனைக் குறிப்பிட்டார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கும்போது, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் விருப்பு வாக்குமுறைமை மிகவும் கடுமையானது எனவும் ஒரு வீட்டிலுள்ள இரண்டு சகோதரர்கள் விருப்பு வாக்குமுறைமை காரணமாக பகைவர்களாக மாறிவிடுகின்றனர் என்றார்.

மேலும் கம்பகா மாவட்டத்திலிருந்து அதிக எண்ணிக்கையிலான மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் ஒரே குழு என்ற வகையில் இந்தத் தேர்தல் நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றி பெறுவதே தமது நோக்கம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார். (2-6)

## சனத்ஜெயசூரிய சென்னையில் விளையாடக்கூடாது

### கிருஸ்ணசாமி எச்சரிக்கை

எதிர்வரும் 6 ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெறவுள்ள ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டித்தொடர் ஆட்டம் ஒன்றில் இலங்கையின் வீரர் சனத் ஜெயசூரிய பங்கேற்க கூடாது என புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஸ்ணசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, மும்பாய் இந்தியன் அணிக்காக விளையாடும் ஜெயசூரிய இலங் கையின் பொதுத்தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியின் சார்பில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிடுகிறார்.

ராஜபக்ச இலங்கையில் தமிழர்களின் அழிவுக்கு காரணமாயிருந்தவர்,கொன்று குவித்தவர். அவரின் கட்சியில் இணைந்து போட்டியிடும் ஒருவருக்கு தமிழகத்தில் விளையாட வாய்ப்பு வழங்கப்படக்கூடாது.

எனது எச்சரிக்கையை மீறி சனத் ஜெயசூரிய விளையாடினால் நான் மைதானத்தில் போராட்டத்தை நடத்துவேன் என கிருஸ்ணசாமி மேலும் தெரிவித்துள்ளார். ள(2-6)

## இந்து மயானத்தில் துப்புரவுப் பணி

பிராந்திய உள்ளூராட்சி ஆணை யாளரின் பணிப்பின் பிரகாரம் எதிர்வரும் 3 ஆம் திகதி (செவ்வாய்) கொல்லங்கிராய் இந்து மயானத்தில் துப்புரவுப் பணி செய்ய தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதில் பொதுமக்கள், ஊழியர்கள், நகர அபிவிருத்தி, ஆலோசனை உறுப்பினர்கள் அனைவரையும்கலந்துகொள்ளுமாறு நகர சபை செயலாளர் செல்வி வி. சிவக்கொழுந்து தெரிவித்தார். (2-31)

# உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள காணிக்கை அன்னை ஆலய திருப்பலி பூஜை

(யாழ்ப்பாணம்)

முப்பது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தச் சூழ லால் நீண்ட காலமாக பூஜைகள் நடைபெறாமல் கைவிடப் பட் டிருந்த வரலாற்றுப் புகழ்மிக்க மயிலிட்டி காணிக்கை அன்னை ஆலயம் யாழ் .பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் எம்.ஹத்துருசிங்கவின் ஆலோசனையின் பேரில் இத் தலை மையக பிரதம அதிகாரி பிரிகெடியர் பிசிஜே ஏஎஸ் ரொட்டி கோவின் மேற்பார்வையில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் படைப்பிரிவுகளின் இரா ணுவ வீரர்களதும் அப் பகுதி பொது மக்களினதும் ஒத்துழைப்புடன் குறுகிய காலத்தில் சிரமதானப் பணியொன்று மேற்கொள்ளப்பட்டு அங்கு திருப்பலி பூஜையொன்று மிகவும் கோலாகலமாக கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்டது.

வரலாற்றுப் புகழ்மிக்க இந்த ஆலயம் 300 வருடங்களுக்கு முன்னர் போர்த்துக்கேயரால் கிறிஸ்தவ மதத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்காக மயிலிட்டி பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளதுடன் ஒல்லாந்தர் இந்த ஆலயத்தை அழித்து கத்தோலிக்க மதத்தை மக்களிடமிருந்து தூர விலக்க முற்பட்டனர். அவர்களின் முயற்சி சிறிது காலம் தொடர்ந்தும் ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் வாழ்ந்து வந்த கிறிஸ்தவ மக்கள் இங்கு மெழுகுவர்த்தி ஊர்வலமொன்றை நடத்தி மீண்டும் வழிபாடுகளை மேற்கொண்டனர்.

யுத்தம் காரணமாக இவ்வாலயத்தில் பூஜைகள் நடைபெறுவது மீண்டும் தடைப்பட்டதுடன் ஆலயம் அழிவுக்கும் உள்ளானது.

மேலும் சமாதானத்தைக் தொடர்ந்து கடந்த 12 வருட காலமாக பூஜைகள் நடைபெறாது கைவிடப்பட்டிருந்த இவ்வாலயத்தை சீரமைத்து முதல் முறையாக நடத்தப்பட்ட திருப்பலி பூஜை கடந்த 20ஆம் திகதி யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதியை பிரதிநிதித்துவப்படுத்தி இத்தலைமையக பிரதம அதிகாரி பிரிகேடியர் பிசிஜேஏஎஸ் ரொட்ரிகோ உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் வீரர்களினதும் பிரதேச வாழ் சுமார் இரண்டாயிரம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கிறிஸ்தவ பக்தர்களினதும் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இவ்வுற்சவம் யாழ் கிறிஸ்தவ சபையின் அருட்திரு ஜயடின் அடிகளார் உட்பட பிரதான பங்குத் தந்தைகளின் தலைமையில் நடைபெற்றதுடன் இவ் வைபவத்தை சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு இராணுவத்தினர் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டனர்.

மேற்படி செய்தி தொடர்பான புகைப்படங்கள் ஈமெயில் மூலம் 2010 மார்ச் 21ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளதுடன் மேற்படி செய்தியை பிரசுரித்துதவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். (2)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### மதமும் ஒழுக்கமும்

மனிதனுக்கு மன அமைதியை தருவது தான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும். மறு உலகத்தில் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கையில் துன்பத்தை அனுவிப்பது அறிவுடைய செயலாகாது. ஒருவன் இங்கேயே, இப்போதே இன்பத்தைப் பெறவேண்டும். இப்படிப்பட்ட இன்பத்தை தரக்கூடிய மதம் எதுவாக இருந்தாலும் அந்த மதம் தான் சமுதாயத்திற்கு ஏற்ற உண்மையான மதமாகும். எப்போதெல்லாம் எந்த ஒரு மதம் வெற்றி பெறுகிறதோ அப்போதெல்லாம் அந்த மதத்துக்குப் பொருளாதார வலிமை இருக்கவேண்டும். அதைப்போல ஆயிரக்கணக்கான மதப் பிரிவுகள் அதிகாரத்திற்கு வரப் போராடியபடி இருக்கலாம். ஆனால் உண்மையில் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய மதம் மட்டுமே அதிகாரத்தை கைப்பற்றும்.

# எங்களுக்கான அரசியல் பலத்தை நாமே உறுதி செய்ய வேண்டும்!

## கூட்டமைப்பின் வேட்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்



பொதுவாக எம்மக்கள் மத்தியில் அரசியல் தொடர்பான ஒருபக்கப் பார்வையே இருக்கின்றது. இந்நிலையில் மக்கள் பல அரசியல் சித்தாந்தங்களுக்குள் திசை திருப்பித் தடுமாறியமைக்குக் காரணம் கடந்தகால இலங்கை அரசுகளும் தமிழ்த் தலைமைகளும் தந்த அனுபவங்களே.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் முதுகலை மாணவர்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

உண்மையில் நான் பல இடங்களில் அடிக்கடி குறிப்பிடுவது போல் அரசியலில் ஆக்கபூர்வமான மக்களின் மேம்பாடு சார்ந்த விடயங்களை எமது மக்களுக்கு வழங்க வேண்டிய தேவை உண்டு. ஆனால் எமது மக்கள் கடந்த தமது 60 வருடங்களுக்கு மேலான அரசியல் பங்குபற்றலினூடாக அதிகமான துயரங்களையே பெற்றுக் கொண்டார்கள்.

2009 இல் வன்னிப் பெருநிலப்பரப்பில் எமது மக்கள் மிகப் பெரிய மனித அவலத்தை உலகத்தில் எங்கும் நிகழாத இடம்பெயர்வினைச் சந்தித்தனர். இன்னமும் அவர்கள் அவலத்திலிருந்து மீள முடியாதவர்களாகவே பெயரளவில் உயிர் வாழ்ந்து வருகின்றனர்.

போரின் வெற்றியையும் தமிழ் மக்களின் இன அழிப்பையும் காட்டிப் பெருமித அரசியல் நடாத்தும் மகிந்த அரசுக்கு எம்மக்கள் கை, கால்களை இழந்த, உடன்பிறப்புக்களை இழந்த, பெற்றோரையிழந்த, பிள்ளைகளையிழந்த, சொத்துக்களையிழந்த துன்ப துயரங்கள் பிரசார யுக்தியாகவே பயன்படுகின்றன.

வன்னிப் பெருநிலப் பரப்பில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட வேண்டுமென்பது அனைவரின் விருப்பமாய் உள்ளது. ஆனால் ஏ-9 வீதியோரங்களில் ஓரிரு தகரக் கொட்டில்களிலேயே மக்களைக் காண முடிகிறது. இன்னமும் மக்களைப் போக விடாத பகுதிகளே அதிகம். எதுவித இழப்பீடுகளும் இதுவரைவழங்கப்படவில்லை. இவற்றிலிருந்து எமது மக்களை மீளச் செய்வதே தமிழ் அரசியலில் இறங்கியுள்ள எமது கடமையாகும்.

அதேபோல் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இடம் பெயர்க்கப்பட்ட மக்கள் இருபது வருடங்களுக்கு மேலாக வெவ்வேறு இடங்களில் முடக்கப்பட்டு அவர்களின் திறமைகள், முயற்சிகள் அடக்கப்பட்டுள்ளன. 20 வருடங்களாக மீள்குடியேற்றம் செய்ய முடியாது அல்லலுறுகின்றார்கள். ஒவ்வொரு தேர்தல்களின் போதும் உறுதிகள் வழங்கப்படுகின்றன. இதனைக் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் எம்மால் காணமுடிந்தது.

எம்மக்களின் இந்த அவல வாழ்வு தொடராமல் இருப்பதற்கு எங்களுக்கான அரசியல் பலத்தினை பொருத்தமானவர்களைக் கொண்டு உறுதி செய்யவேண்டிய தேவை உங்கள் அனைவரின் கைகளிலுமே உள்ளது.

அரசியலில் கல்வியாளர்கள் தேவை என்பதை நீங்கள் புரிந்துகொண்டுள்ளீர்கள். உங்கள் அனைவரின் ஒட்டுமொத்தமான ஆதரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் எனக்கும் உண்டென்பதை அனைவருமே உணர்த்தியுள்ளனர். அதனை உறுதிப்படுத்துவதற்கு எல்லோரும் இணைந்து வாக்களிக்கவும், மக்களை வாக்களிக்கத் தூண்டவும் வேண்டும் என்றார். (ந-2)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இந்தியாவின் துரோகத்தனத்திற்கு உதவியது

## த.தே.வி.கூட்டமைப்பின் தலைமை வேட்பாளர் சிறீகாந்தா உரை



"தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடித்து தமிழ்த் தேசிய எழுச்சிக்கு முடிவு கட்டவேண்டும் என்ற நோக்கோடு இந்திய அரசாங்கம் நடந்து முடிந்த போரில் இலங்கை அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியது. ஆயுதங்கள் வழங்கியும் நிதி கொடுத்தும் ஆள் இல்லா உளவு விமானங்களை வன்னி மேல் பறக்கவிட்டு தகவல் சேகரித்துக் கொடுத்தும் உதவி புரிந்தது. நெருக்கடியான சில சந்தர்ப்பங்களில் இலங்கைப் படைகளுக்கு உதவியாக இந்திய கொமாண்டோ அணிகள் ஈடுபடுபடுத்தப்பட்டன. இந்தியாவின் துரோகத்துக்கு மறைமுகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமைப்பீடமும் ஒத்தாசை புரிந்தது. இதுதான் கூட்டமைப்பில் பிளவுகள் ஏற்பட்டதற்கு அடிப்படைக் காரணம் ஆகும்"

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மாலை திருநெல்வேலி சிவகாமி அம்மன் கோவில் வீதியில் நடைபெற்ற தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவரும் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான ந. சிறீகாந்தா தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை தொகுதிக்கான வேட்பாளர்களில் ஒருவரான வி.கேதீஸ்வரதாசனின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றுகையில் சிறீகாந்தா தெரிவித்தாவது,

"யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இந்தியாவில் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது. ஈழத்தமிழர் பிரச்சினையில் பொங்கி எழுந்திருந்த தமிழ்நாட்டு மக்களை சமாளிக்க கூட்டமைப்பின் உதவியை இந்திய அரசாங்கம் நாடியது. கூட்டமைப்பை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

அப்போது பெரும்பான்மையான கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய அரசுடன் கூட்டமைப்பு பேசுவதானால், யுத்த நிறுத்தம் ஒன்றை இந்தியா கொண்டு வந்தபின்னரே, பேசவேண்டும் என்று முடிவெடுத்தனர். ஆனால் கூட்டமைப்புத் தலைமை அந்த முடிவை மீறி டெல்லி சென்று பேசியது. யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தவும் தவறியது. இது வரலாற்று துரோகம் ஆகும் இப்போதும் கூட இந்திய அரசாங்கத்தின் திட்டத்திற்கமைவாகவே கூட்டமைப்பு தலைமை செயற்பட்டு வருகின்றது. சிங்கள ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கல் என்ற பெயரில் அரசியலமைப்பின் பதின்மூன்றாம் திருத்தத்தை, தூக்கிப் பிடித்து தூசி தட்டி சில திருத்தங்களைச் செய்து, தீர்வுத்திட்டம் ஒன்றை கொண்டு வர சோனியா காந்தி தலைமையில் இயங்கும் இந்தியா அரசாங்கம் தீவிரமாகவுள்ளது.

இதற்கு ஆதரவாக கூட்டமைப்பு செயற்பட வேண்டும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது. கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களில் இந்தியாவின் திட்டத்திற்கு எதிரானவர்கள் எல்லாம் அடையாளம் காணப்பட்டு வேட்பாளர் நியமனத்தில் ஒதுக்கி விடப்பட்டுள்ளனர்.

கூட்டமைப்பு பிளவுபட்டதற்கு இந்திய அரசும் அதற்கு துணை போய்க் கொண்டிருக்கும் சில கூட்டமைப்பு தலைவர்களுமே காரணம். இதற்கான பதிலை எதிர்வரும் தேர்தலில் தமிழ்மக்கள் வழங்கவேண்டும்"

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுகையில், "கடந்த மார்கழி மாதம் தமிழ்நாட்டில் நிகழ்ந்த உலகத்தமிழர் பேரவை மகாநாட்டிற்கு சென்ற என்னை சென்னை விமான நிலையத்தில் வைத்து இந்திய அரசாங்கம் திருப்பி அனுப்பியது. அதன்பின் ஒரு சில வாரங்களில் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் டெல்லிக்கு அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. இந்தியாவின் துரோகத்தை அம்பலப்படுத்தியதற்கு எனக்கு வழங்கப்பட வரவேற்பே இதுவாகும்.

யுத்தத்தின் தீர்வுக்கான கட்டத்தில் டெல்லிக்கு அழைக்கப்பட்ட கூட்டமைப்பு தலைவர்கள் கொடுத்த மகஜரில் யுத்த நிறுத்தம் என்றவார்த்தையே இல்லை. இந்திய அரசுக்கு கூட்டமைப்பு துணை போன துரோகத்தைப் பற்றி பகிரங்க விவாதம் ஒன்றுக்கு நான் தயாராக இருக்கின்றேன். விவாதத்திற்கு வர கூட்டமைப்பின் தலைவர் களில் எவராவது தயாரா?" என்று கேள்வி எழுப்பினார்.

வேட்பாளர்கள் சட்டத்தரணி கனக.நமநாதன், அ.தவநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (ந-5)




# பொதுத் தேர்தல்-2010

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமோசனம் ஏற்பட நடவடிக்கை எடுப்போம்

## கிளிநொச்சியில் திருமதி விஜயகலா மகேஸ்வரன்



யுத்தம் காரணமாக கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்து இன்னமும் மீளக்குடியமர்த்தப் படாது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மிக விரைவில் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று இராணுவ உயர் அதிகாரிகள், ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மற்றும் வேட்பாளரும் ஊடகவியலாளருமான எஸ்.ஸ்ரீகஜன் ஆகியோரிடம் உறுதியளித்துள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த திருமதி விஜய கலா மகேஸ்வரனும் எஸ்.ஸ்ரீகஜனும் மாவட்ட இராணுவ உயர் அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

முகாம்களில் மீளக்குடியேற்றப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ள மக்கள் சொல்லொணா துயரங்களை அனுபவிக்கின்றனர். இவர்களை கூடிய விரைவில் மீளக்குடியேற்ற வேண்டியதன் அவசியத்தையும் இவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சியில் மக்கள் மீளக்குடியேற்றப்பட்டுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்த வேட்பாளர்கள் இருவரும் மக்களை சந்தித்து அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்துள்ளனர்.

கிளிநொச்சி விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த முதன்மை வேட்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ,

கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிட்ட பகுதிகளிலேயே மக்கள் மீளக்குடியேற்றப் பட்டுள்ளனர். மீளக்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் உரிய வசதிகள் இன்றி கஷ்டப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது. இடிந்த வீடுகளிலும், தகரக் கொட்டகைகளுக்குள்ளுமே மக்கள் வசித்து வருகின்றனர்.

பெருந்துன்பத்தை அனுபவித்த மக்கள் இனியாவது நிம்மதியாக வாழவேண்டும். அதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

இதேபோல் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களும் துரிதகதியில் மீளக் குடியேற்றப்பட வேண்டும். இவர்களுக்குரிய வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். உறவுகளையும் உடமைகளையும் இழந்து தவிக்கும் இந்த மக்களுக்கு விமோசனம் ஏற்படவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் நாம் எடுப்போம். (ந)

# 'சுப்பர்ஓவர்' முறையில் பஞ்சாப் வெற்றி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஏமாற்றம்

(சென்னை)

இரசிகர்களை இருக்கைநுனிக்கே கொண்டு சென்ற போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 'சுப்பர்' ஓவர் முறையில் சென்னை சுப் பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 16 ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இப் போட்டியில் அணித்தலைவர் தோனி பூரண உடற்தகுதியின்மை காரணமாக விளையாடாத நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு சுரேஷ் ரெய்னா தலைமை வகித்தார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

இதில் யுவராஜ்சிங் 28 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் இர்பான் பதான் 32 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 39 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 4 ஓவர்கள் பந்துவீசி 16 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மோர்கல் 2 விக்கெட்டுக்களையும் லக்ஸ்சுமிபதி பாலாஜி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுக்க போட்டி சமனிலையானது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஒரு பந்தில் ஒரு ஓட்டம் பெறவேண்டிய நிலையில் இர்பான் பதான் வீசிய கடைசிப் பந்தில் அஸ்வின் ஆட்டமிழக்க போட்டி சமனிலையானது. இந்நிலையில் வெற்றி நிலையைத் தீர்மானிக்க சுப்பர் ஓவர் முறை வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம் இரு அணிகளுக்கும் தலா ஒரு ஓவர்வழங்கப்படும். ஒவ்வொரு அணியிலும் தலா மூன்று துடுப்பாட்ட வீரர்கள் களமிறங்குவர்.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு முதலாவது புந்தில் அல்பி மோர்கல் ஒரு ஓட்டத்தைப் பெற்றுக்கொடுத்தார். இரண்டாவது பந்தை எதிர்கொண்ட மத்யூ ஹைடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா மூன்றாவது பந்தில் சிக்ஸர் ஒன்றை அடித்து அசத்தினார்.

எனினும் 5 ஆவது பந்தில் சுரேஷ் ரெய்னா ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 09 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தது.

இதில் திரோன் சிறப்பாக பந்துவீசி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். தொடர்ந்து 10 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடி கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணிக்கு மஹேல ஜெவர்த்தன முதலாவது பந்தில் சிக்ஸர் விளாசி நம்பிக்கையளித்தார்.

எனினும் முரளிதரனின் இரண்டாவது பந்தில் மஹேல ஜெயவர்த்தன ஆட்டமிழந்தார். அடுத்து இர்பான் பதான் களமிறங்க மறு முனையில் மூன்றாவது பந்தை எதிர் கொண்ட யுவராஜ் சிங்கால் ஓட்டமெதனையும் பெற முடியாமல் போனது.

எனினும் 4ஆவது பந்தில் யுவராஜ்சிங் பவுண்டரி விளாசி கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி ஒரு விக்கெட்டை இழந்து 10 ஓட்டங்களை எடுத்து போட்டியில் சுப்பர் ஓவர் முறையில் வெற்றிபெற்றது.

இதில் பார்த்திப்பட்டேல் 58 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 57 ஓட்டங்களையும் மத்யூ ஹைடன் 24 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா 15, அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திரோன் 2 விக்கெட்டுக்களையும் பதான், பவார், சாவ்லா மற்றும் யுவராஜ் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய நான்காவது போட்டியில் முதலாவது வெற்றியைப் பெற்று 2 புள்ளிகளை எடுத்தது.

இதேவேளை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய நான்காவது போட்டியில் இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.

# சைமண்ட்ஸ், ரோகித் அசத்தல் டெக்கான் சார்ஜர்ஸ் வெற்றி

(கட்டாக்)

ரோகித் சர்மா, சைமண்ட்ஸின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் டெக்கான் சார்ஜர்ஸ் அணி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று கட்டாக்கில் நடைபெற்ற லீக் சுற்றின் 15 ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் அணித்தலைவர் காம் பீர் பூரண உடல் தகுதியின்மை காரணமாக விளையாடாத நிலையில் டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு தினேஷ் கார்த்திக் தலைமை வகித்தார்.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களையிழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரோகித் சர்மா 30 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக)45 ஓட்டங்களையும் அன்ரூ சைமண்ட்ஸ் 24 பந்துகளில் (3 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் கிப்ஸ் 26 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் ரி.சுமன் ஆட்டமிழக்காமல் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 29 ஓட்டங்களையும் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மிர்ஷா, நான்ஸ், நாகர், பாட்டா மற்றும் ஹன்ரி ஹயூஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேலில்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 161 ஓட்டங்களை மாத்திர மெடுத்து 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.


இதில் வோ்னர் 33 பந்துகளில் (4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 57 ஓட்டங்களையும் அணித்லைவர் தினேஷ் கார்த்திக் 27 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 46 ஓட்டங்களையும் ஏ.பி.டி வில்லியர்ஸ் 27 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்ரூ சைமண்ட்ஸ் 3 விக்கெட்டுக்களையும் ரோகித் சர்மா 2 விக்கெட்டுக்களையும் சமிந்த வாஸ், ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த சைமண்ட்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் டெக்கான் சார் ஜர்ஸ் அணி தான் விளையாடிய நான்காவது போட்டியில் மூன்றாவது வெற்றியைப் பெற்று 6 புள்ளிகளை எடுத்துள்ளது. இதேவேளை டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 5 ஆவது போட்டியில் மூன்றாவது தோல்வியைச் சந்தித்தது.

# ஐ.பி.எல். அமைப்பில் புனே, கொச்சி அணிகள் சேர்ப்பு




இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பில் அடுத்த ஆண்டு முதல் புனே, கொச்சி ஆகிய இரு அணிகள் புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பில் தற்போது 8 அணிகள் அங்கம் வகிக்கின்றன.

இந்நிலையில் அடுத்த ஆண்டு முதல் அணிகளின் எண்ணிக்கையை 10ஆக உயர்த்துவதற்கு ஐ.பி.எல். அமைப்பு தீர்மானித்தது.

இதனடிப்படையில் புதிய இரு அணிகளை வாங்க முன்வந்தவர்களிடமிருந்து ஏலம் ஐ.பி.எல். அமைப்பால் கோரப்பட்டது.

முதலில் ஏலம் விடுவதற்காக திகதி கடந்த 7ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் போதிய வரவேற்பு இல்லை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக அத் திகதி ரத்துச் செய்யப்பட்டது.

மேலும் ஏலத்தில் பங்கேற்பவர்களுக்கு கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. பின்னர் அவை தளர்த்தப்பட்டு புதிய முறையில் ஏலம் விடப்பட்டது.

இந்நிலையில் சகாரா குழுமம், ஜெய்ப்பீ குழுமம், வீடியோகான், கதானி குழுமம் உள்ளிட்ட 5 நிறுவனங்கள் ஏலத்தில் கலந்து கொள்வதற்கு விண்ணப்பித்திருந்தன.

ஐ.பி.எல். விதிப்படி 5 நிறுவனங்களும் ஏலத்தில் கலந்து கொள்வதற்காக 46 கோடி ரூபாய்க்கு (இந்திய ரூபாய் பெறுமதியில்) உத்தரவாதம் அளித்திருந்தன.

இதன் பிரகாரம் ஏலம் நேற்றுக்காலை சென்னையில் நடைபெற்றது.

இதில் அணி ஒன்றின் குறைந்த பட்ச விலை ஆயிரத்து 24 கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டது.

அத்துடன் புனே, அகமதாபாத், கான்பூர், நாக்பூர், இந்தூர், கட்டாக், குவாலியர், விசாகப்பட்டினம் ஆகியவற்றில் ஏதேனும் இரு நகரங்களை அடிப்படையாகக் கொண்டு புதிய அணிகள் ஏலத்தில் தெரிவுக்கு விடப்பட்டது.

இதில் புனே அணியை ஆயிரத்து 702 கோடி ரூபாய்க்கு சகாரா நிறுவனமும் கொச்சி அணியை ஆயிரத்து 533 கோடி ரூபாய்க்கு ரெண்டஸ்வாஸ் ஸ்போட்ஸ் நிறுவனமும் வாங்கின.

இதன் மூலம் ஐ.பி.எல். அமைப்பினால் 2011ஆம் ஆண்டு நடத்தப்படும் நான்காவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் புனே, கொச்சி அணிகள் புதிதாக சேர்க்கப்பட்டு 10 அணிகள் பங்கேற்கவுள்ளன.



GREAT OPPORTUNITY
FTUDY
AUSTRALIAN
JOB COURSES
SPOT ADMISSIONS
Call: 021 5670345

## தடுத்து வைக்கப்பட்டுள்ள...

யிலேயே சரத் பொன்சேகாவின் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகத்திற்காகவும் திறமையான நிர்வாகத்திற்காகவும் போராடியமைக்காக நான்கு சுவர்களுக்குள் அடைபட்டுக் கிடக்கின்றேன். பொதுவாக ஒரு குற்றவாளியை விட மோசமாக நடத்தப்படுகின்றேன்.

இலங்கையில் முறையற்ற தேர்தல் முறைமையினால் ஜனநாயகம் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. எனினும் இது தற்காலிகமானது. இதனைக் கருத்தில் கொண்டே உயர் நீதிமன்றத்தில் தான் மனுத் தாக்கல் செய்துள்ளதாக சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

திறமையான நேர்மையான இராணுவப் படையின் மூலம் தாம் நாட்டில் இருந்து பயங்கரவாதத்தைத் தோற்கடித்ததாக சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து அரசியல் அமைப்பு உரிமையின்படி இராணுவத்தில் இருந்து விலகி அரசியலில் பிரவேசித்ததாகக் குறிப்பிட்டுள்ள அவர், எனினும் ஜனநாயகம் அற்ற முறை ஒன்று தமக்கு எதிராகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

தமது இந்தக் கருத்துக்களை சிங்களத்திலும் தமிழிலும் மொழிமாற்றம் செய்து வெளியிடுமாறும் அவர் கேட்டுள்ளார். இதேவேளை தடுப்புக் காவலில் தான் நடத்தப்படும் விதம் குறித்து ஐ.நா. செயலாளர் பான் கீ மூனுக்கு தான் கடிதம் அனுப்பியுள்ளதாகவும் பொன்சேகா கூறியுள்ளார். (ச-5)

STUDY IN UK
GBS அதிபர் உங்களுடன்
எதிர்வரும் 24 ஆம் திகதி
புதன்கிழமை வரையும், ஆலோசனை
வழங்குவார்.
காலை 9 மணிமுதல் மாலை 3.30 மணிவரை
021 - 373 4747
077 - 3537378
GBS, Greenwich Business School
No.19, Chettiththeru Lane,
Nallur, Jaffna.
(912)

## பயங்கரவாதத்...

இறுதிக் கட்ட யுத்தத்தின் போதே அநேகமானவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை முழுமையாக இல்லாதொழிப்பதற்கு அவசர காலச் சட்டம் அவசியப்படுவதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனினும் மாற்றுக் கருத்துக்களை முடக்குவதற்காக அரசாங்கம் அவசர காலச் சட்டத்தைப் பயன்படுத்துவதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## அவசரகாலச் சட்ட...

பெற்ற பேச்சுக்கள் குறித்த தகவல்களை வெளியிடுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் பேர்னாட் சாவேஜ் மறுத்துள்ள போதும் பேச்சுக்கள் முக்கியமானது எனவும் ஆனால் அது மட்டும் தமது முடிவுகளை மாற்றியமைக்கப் போதுமானதல்ல எனவும் தெரிவித் துள்ளார்.

இலங்கை அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர் பில் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். மனித உரிமைகளே எமது வெளிவிவகார உறவுகளுக்கு முக்கியமானவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்படவுள்ள ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையால் பல ஆயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புக்களை இழப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்ற போதும் தாம் ஐரோப்பிய ஒன்றிய விதிகளை மீற முடியாது என சாவேஜ் தெரிவித்துள்ளார். (ச-5)

## சனல்-4...

தெரிவித்த அவர், அந்த வரையில் குறிப்பிடப் பட் டிருந்த தகவல் உண்மையானது எனவும் ஆனால் அந்தத் தகவலை யார் எழுதியது? எப்படி அது சனல்-4 தொலைக்காட்சியின் கைகளுக்குக் கிடைத் தது? எனத் தமக்குத் தெரியாது எனவும் இது தொடர்பில் தமக்கும் சந்தேகம் நிலவுவதாகக் குறிப்பிட்டார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவை அவரது மனைவி மாத்திரமே பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றார். இதன்போது அவர் தம்மிடமுள்ள கைப்பை மற்றும் கண்ணாடி என்பவற்றைக் கொடுத்து வெறுமனே உணவு மட்டுமே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றார்.

இதன் மூலம் இது ஒரு திட்டமிட்ட செயற்பாடு என நாம் சந்தேகம் கொள்வதுடன் இது ஜெனரலை சிறைக்குள்ளேயே இறுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் மற்றுமொரு நாட கம்.

சனல்-4 தொலைக்காட்சி இதற்கு முன்னரும் இலங்கை மீது ஒரு குற்றச்சாட்டை முன் வைத்தபோது அதற்கு முதலில் எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் மக்கள் விடுதலை முன்னணியே.

இந்த நாட்டிலே அசாதாரண சூழ்நிலை உச்சக்கட்டத்தில் இருக்கும் வேளையில் நாங்கள் இலங்கையிலேயே இருந்தோம். டலஸ் அழகப்பெருமவைப் போல அமெரிக்காவில் இருக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் ஜனநாயகத் தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினருமான அநுர குமாரதிஸநாயக்கவை எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் விசாரணைக்கு வருமாறு குற்றத் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டணி குறிப்பிட்டுள்ளது. (ச-5)

காணி விற்பனைக்கு
யாழ். நகருக்கு சுமார் 4KM தூரத்தில் நல்லூர் கோவிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்பு மிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடி தண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய சுமார் 4 ¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விரும்பினால் இரண்டாகவும் பிரித்து கொடுக்கப்படும்.
உடன் தொடர்புகளுக்கு:-
077 2469015, 077 0711512, 077 6081693

மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
எமது நிறுவனத்தில் புதிய வடிவமைப்புடன் உதயமாகின்றது
திருமண அழைப்பிதழ் காட்சியறை
திறப்பு விழா
அன்புடையீர்!
நிகழும் மங்கலகரமான விரோதி வருடம் பங்குனித்திங்கள் 8ம் நாள் (22.03.2010) திங்கட்கிழமை ஸப்தமித்திதியும் ரோகிணி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 9.27 மணி முதல் 11.27 மணிவரையுள்ள இடப லக்கின சுபவேளையில் நல்லைக்கந்தனின் திருவருள் துணையோடு எமது நிறுவனத்தின் புதிய காட்சியறையைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.
உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்கலகரமான நிகழ்வுகளுக்கு ...
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300க்கு மேற்பட்ட
பல வர்ண புத்தம்புதிய டிசைன்களுடன் எமது காட்சியறையில் உங்களுக்காக ...
MATHI COLOURS PRINTERS
Wedding Card Show Room
15/2B, முருகேசர் லேன், நல்லூர், (முத்திரைச்சந்தி) யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285, 0777 222524
இணையத்தளம் : www.mathicolours.com

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010
யாழ் தேர்தல் மாவட்டம்
(654)

- இன்று வரை நீ மனித உரிமைக்காய் குரல் கொடுத்து வருகின்றாய்...
- இனிமேல் நீ எம் இனத்தின் உரிமைகளுக்காய் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் உரத்துக் குரல் கொடுப்பாய்
- உன் பேச்சிலும், மூச்சிலும், உயிரிலும் 'தமிழ்' என்கிறாய் அதுவே எமக்கு ஆறுதல்!!
- பொருத்தமான நேரத்தில் தீர்க்கமாய் முடிவெடுத்து விட்டாய், உன்னைப் போல் ஒருவனை நாடாளுமன்றம் அனுப்ப எம்மினம் கொடுத்து வைத்துள்ளது.
மு.றெமிடியஸ்
(மனித உரிமைகள் சட்டத்தரணி
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
X 9

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2010

என்றும் உரிமைக்காகக் குரல் கொடுக்கும்
மண்பற்றுள்ள கல்வியியலாளனுக்கு
வாக்களிப்போம்.
X 7
கந்தையா அருந்தவபாலன்
(B.A (Hons), M.Ed, PGDE, PGDEM)
அதிபர், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(657)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010
தமிழ் தேசியக் கூட்டமைப்பு
அடையாளங்களை ஆக்கிரமிக்கும்
சூழ்ச்சிகளை முறியடித்து
பூர்வீக வாழ்வை தொடர-நம்
உரிமைகளை உறுதிசெய்வோம்!
X
10 X
இலங்கைத் தமிழரசுக் கட்சி
சிவஞானம் சிறீதரன்
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய (கனிஸ்ரா) அதிபர்
(அ-4735)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.